Registered No. M-4483

Madras War Review { TAMIL 11-2-1944

# யுத்த சஞ்சிகை

மலர் IV | 1944-ம் ஆண்டு பிப்ரவரி மீ 11உ, வெள்ளிக்கிழமை | இதழ் 23

## இந்தியா சிறந்த வேலை செய்து வருகிறது

லெப்டினெனன்ட் ஜெனரல் வில்ப்ரெட் லின்ட்செல்.

நேச நாடுகளுக்கு இது வரை மூன்று முக்கியமான தளங்களிருந்தன. பிரிட்டன், அமெரிக்கா, மத்தியக் கிழக்கு நாடுகள். இந்தியா நான்காவது தளமாக வேண்டும். இன்னும் அது தளமாகவில்லை; என்றாலும் விரைவாக தளமாகிக் கொண்டு வருகிறது. நாளடைவில் பிரான்சு மீது படை யெடுத்துப் போன பிரிட்டிஷ் படைகளை விட, அதிகமான படைகளை அது வகிக்க வேண்டும்.

இப்போ திருப்பதை விட, அதிகக் கப்பல்கள் தங்கத் தக்கபடி இந்தியத் துறை முகங்களை விருத்தி செய்து அமைக்க வேண்டியது மிகவும் அவசியம். அப்போது தான், இந்நாட்டில் செய்யப்படாத பொருட்களை ஏராளமாகக் கொண்டு வந்து சேர்த்து வைத்துக் கொள்ளக் கூடும். அன்றியும் பெரும் போராட்டத்தை நடத்துவதற்கு ஏராளமானவர்கள் தேவை. இதில் மிகவும் முக்கியமான விஷயம் போக்கு வரவு சாதனம்.

இந்தியா மிகச் சிறந்த முறையில் காரியங்களைச் செய்து கொண்டு வருகிறது. இன்னும் மேலாகவும் செய்யக் கூடும். ஒரு வருஷத்தில், ஏறக்குறைய 150 கோடி ரூபாய் பெறுமான மூள்ள துணிகளும், மற்ற பொருட்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன. என்றலும், இந்தியாவிலுள்ள தொழிலாளர்களையும், இயந்திரங்களையும் மூலப் பொருட்களையுங் கொண்டு, இன்னும் அதிகப் பொருட்கள் உற்பத்தி செய்ய முடியாதென்று சொன்னால், அது சுத்த முட்டாள் தனமாகும்.

இந்தியாவின் வடமேற்குத் திசையிலிருந்து படையெடுத்து அந்நியர்கள் வராதபடி பாது காப்பது தான், பரம்பரையாகக் கையாளப்பட்டு வந்த முறை. அது இப்போது மாற்றப் பட்டுவிட்டது. கிழக்கே யிருந்து வரக் கூடிய ஆபத்தைத் தடுக்கத் தக்கபடி, தன் இராணுவ அமைப்பை மாற்றி விட வேண்டிய அவசியம், அதற் கேற்பட்டுவிட்டது. அங்கிருந்து அது எதிரியைத் தாக்கும் பொருட்டு, கிளம்ப வேண்டும்.

—லெப்டினெனன்ட் ஜெனரல் வில்ப்ரெட் லின்ட்செல்,

*இந்தியப் படையின் பிரதம நிர்வாக உத்தியோகஸ்தர், நியூ டில்லியில் பிப்பிரவரி மாதம் 6-ம் தேதி கூறியது.*

## பொருளடக்கம்.


| | பக்கம். | | பக்கம். |
|---|---|---|---|
| முகப்புப் படம்: லெப்டினெண்ட் ஜெனரல் வில்ப்ரெட் வின்ட்செல் .. .. .. | 1 | விளம்பரம்: தேசியப் போர் முனை ராம தீபம். | 4 |
| இந்தியா சிறந்த வேலை செய்து வருகிறது .. | 1 | ஹிட்லருக்கு குண்டு சத்தந்தான் சங்கீதம் .. | 5 |
| முரசொலி .. .. .. | 2 | யுத்தகாலத்தில அரசாங்க உதவி .. .. | 6 |
| படை விதூஷகனின் பரிகாரி வேஷம் .. | 2 | நரியா? எலியா? பிசாசா? ராக்ஷஸனா? .. | 7 |
| விமானப் படையில் அண்ணனும் தம்பியும் .. | 2 | வீட்டுத் தோட்டம் .. .. .. | 10 |
| தலையங்கம்: ஜப்பானியக் கொடுமைகள் .. | 3 | இந்தியக் கப்பற் படை .. .. .. | 11 |
| | | யுத்த நாட் குறிப்புக்கள் .. .. .. | 12 |


# முரசொலி

"பலவீனமான இலக்கியச் சுவையற்ற ஹிட்லருடைய சொற்பொழிவு, ஜெர்மனியின் அழிவை அறிவிக்கிறது."

—டாக்டர் பினேஷ்,
செக்கோஸ்லோவேகியத் தலைவர், பிப்ரவரி மாதம் 3-ம் தேதி கூறியது.

* * * * * *

"ஸ்பெயின் உண்மையிலேயே ஒரு நடு நிலைமை நாடாக இருக்கும்படி பிரிட்டனும் அமெரிக்காவும் ஒன்றுபட்டுழைத்துக் கவனித்துக் கொள்ளும். இதனால் பெருந் தலைவலிகள் அடிக்கடி ஏற்பட்டு வந்தது."

—மிஸ்டர் ரூஸ்வெல்ட்,
அமெரிக்கத் தலைவர், பத்திரிகாசிரியர்களிடம் பிப்ரவரி மாதம் 4-ம் தேதி கூறியது.

* * * * * *

"ஜெர்மன் யுத்த இயந்திரம் இன்னும் வெல்ல முடியாததாகத்தா னிருக்கிறது. மீண்டும் நீர் மூழ்கிக் கப்பல்களின் தொல்லைகள் ஏற்படா தென்றும், நம் மீது கடுமையாக வெடி குண்டுகளை எறியமாட்டார்க ளென்றும், கடைசி புகலாக விஷ வாயுவை ஹிட்லர் உபயோகிக்க மாட்டா ரென்றும், யாரால் சொல்ல முடியும்? நம் இராணுவ முயற்சிகளைப் பெருக்கும் பொருட்டே நாம் தயார் செய்து கொள்ள வேண்டும். அதே சமயத்தில், சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான ஆயத்தங்கள் செய்வது பற்றிய பொறுப்புக்களையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்."

—லார்ட் மாக்குவான்,
இம்பீரியல் கெமிகல் இன்டஸ்ட்ரீஸ் தலைவர், பிப்ரவரி மாதம் 5-ம் தேதி எடின்பரோவில் கூறியது.

* * * * * *

## படை விதூஷகனின் பரிகாரி வேஷம்

சமீபத்தில் நடை பெற்ற கிருஸ்மஸ் விழாவின் போது, சென்னைப் படையினர் பலவகைகளில் குதூகலமா யிருந்தனர். விருந்துகள், விளையாட்டுகள், நாடகங்கள் முதலியவற்றை நடத்தினார்கள்.

ராயல் இந்தியன் ஆர்மி சப்ளை படையினர் மாறு வேஷப் போட்டி நடத்தினார்கள். வெகு விரைவில் போட்டியாளர்கள் மாறு வேடம் பூண்டு வந்து விட்டனர்.

ஒரு கழுதை மேல், கிருஸ்மஸ் பாதிரி போல உடையணிந்து அந்தப் படையைச் சேர்ந்த விதூஷகரான கந்தசாமி வந்து சேர்ந்தார். கரகோஷமும் கூச்சலும் வானைப் பிளந்தது. ஆனால், அன்று மாலை மாறு வேஷ மணிலதில் முதற் பரிசு ஹவில்தார் நிளர்க் பாட்சாவுக்குத் தான் கிடைத்தது. இவர் ஒரு பஞ்சாபி பரிகாரியைப் போல வேடமணிந்து, தான் மேஜர் துரைக்கு க்ஷவரம் செய்யும் பொருட்டு இங்கிலாந்திலிருந்து வந்திருப்பதாகக் கூறிக் கொண்டு "சோப்பை" ப்ரஷில் குழைத்து, மேஜர் துரையின் கன்னத்தில் பாதி தடவினார். அவருடைய முகத்தை க்ஷவரம் செய்யும் முன்னதாக, "உக்கா" பிடித்துக் கொண்டு, மற்றொரு உத்தியோகஸ்தருக்கும் இப்படியே சோப்பைக் குழைத்துத் தடவினார். இவ்வாறாக, பல உத்தியோகஸ்தர்களுக்கு அரை குறையாகவே க்ஷவரம் செய்து விட்டு விட்டார். இதைக் கண்டு யார் தான் சிரிக்கா திருக்க முடியும்.

## விமானப் படையில் அண்ணனும் தம்பியும்

விமானப் படையைச் சேர்ந்த ஒருவர் லண்டன் ஈஸ்ட் ஹாமைச் சேர்ந்தவர். இவர் இப் படையில் சேருவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு, இவருடைய அண்ணனும் விமானப் படையில் சேர்ந்து இந்தியாவுக்கு அனுப்பப்பட்டிருந்தார். தன்னையும், தன் அண்ணன் வேலை செய்யும் படைக்கு மாற்றும்படி இவர் கோரினார். இவர் கோரிக்கையும் பலித்தது. இந்தியா வந்தார். கிருஸ்மஸ் பண்டிகையைத் தன் அண்ணனுடன் கழிக்க விரும்பி ஆறு நாட்கள் முயன்று, விரும்பியபடியே விழாவன்று கிருஸ்மஸ் விருந்தில் அவரோடு கலந்து கொண்டார்.

# யுத்த சஞ்சிகை

## வாரப் வெளியீடு

மலர் IV | 1944-௵ பிப்ரவரி௴ 11உ, வெள்ளிக்கிழமை | இதழ் 23


## ஜப்பானியக் கொடுமைகள்

பிரிட்டிஷ் அந்நிய நாட்டு மந்திரியான மிஸ்டர் ஆன்டனி ஈடன் சென்ற ஜனவரி மாதம் 28-ம் தேதி காமன்ஸ் சபையில் ஒரு அறிக்கை விடுத்தார். அப்போது யுத்தக் கைதிகளாகப் பிடிபட்டுள்ள நேச நாட்டினரை ஜப்பானியர் எவ்வளவு கொடுமையாக நடத்துகிறார்கள் என்பது பற்றி திடுக்கிடத் தக்க தகவல்களை வெளியிட்டார். மேலும் அவர் கூறியதாவது :—

“பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகளிலிருந்து (இந்தியா உள்பட) போர் முனைக்குச் சென்று யுத்தக் கைதிகளாகப் பிடிக்கப்பட்ட ஆயிரக் கணக்கானவர்கள் கடுமையான உஷ்ணப் பிரதேசத்திலுள்ள காடுகளில் தகுந்த பாதுகாப்பும், துணியும், உணவும், வைத்திய உதவியுமில்லாமல் வசிக்கும்படி நிர்ப்பந்திக்கப் பட்டார்கள். ரயில் வேக்களும் ரோடுகளும் போடுவதற்கு வேலை செய்யும்படி கட்டாயப் படுத்தப் பட்டார்கள். அவர்களுடைய உடல் நிலை வெகு விரைவாகச் சீர் கெட்டுக் கொண்டு வருகிறது. கடும் நோயாயிருப்பவர்களின் சதவிகிதம் வெகு அதிகமாயிருக்கிறது. ஆயிரக் கணக்கானவர்கள் மாண்டு போனார்கள்.

சையாமில் யுத்தக் கைதி முகாம் ஒன்றை நேரில் கண்ட ஒருவர் கூறுவதாவது :—

“யுத்தக் கைதிகளில் அநேகர் அரை நிர்வாணமாகவும் எலும்புந் தோலுமாகவுந் தான் இருக்கிறார்கள். க்ஷவரம் செய்யப்படுவதில்லை. தலை முடியெல்லாம் சடை சடையாகத் திரிந்திருக்கின்றன. தலைக்குத் தொப்பியோ காலுக்குச் செருப்போ கிடையாது. அதுவோ வெப்பம் மிகுந்த நாடு. அக்கம் பக்கத்திலுள்ள நாடுகளில் மனிதர் குடியிருக்கவில்லை. வைத்தியம் முதலிய பல வகை உதவிகளைப் பெறுவதற்கு முடியாமற் போய்விடுகிறது. இதிலிருந்தே இந்த யுத்தக் கைதிகளின் பரிதாபகரமான நிலைமையை எளிதில் உணர்ந்து கொள்ளலாம். ஜாவாவில் மிகச் சிறிய பாதுகாப்பில்லாத, சுகாதார மற்ற மலேரியா கொசுக்கள் நிறைந்த அறைகளில், இவர்கள் அடைக்கப் படுகிறார்கள். இந்த சிறைச் சாலைகளை நடு நிலைமை நாட்டினர்கள் பார்வையிட, ஜப்பானிய அதிகாரிகள் அனுமதிக்காததின் காரணம், இதினின்று விளங்குகிறது. இவர்கள் ஹாங்காங், பார்மோசா, ஷாங்ஹை, கொரியா, ஜப்பானிலுங் கூட, நடு நிலைமை நாட்டுப் பரிசோதகர்களை அனுமதித்தார்கள். இங்கே யுள்ள யுத்தக் கைதிகளின் நிலைமை அவ்வளவு மோசமாக இல்லாதது தான், இதற்குக் காரணம்.

சென்ற 1942-ம் வருஷம் மார்ச்சு மாதம் பார்லிமெண்டில், ஹாங்காங்கில் ஜப்பானியர்கள் செய்த கொடுமைகளைக் குறித்து வெளியிட்டதோர் அறிக்கையின் பயனாகத் தான் இப்படிப்பட்டதோர் நிலைமை அங்கே ஏற்பட்டிருக்கக் கூடும். அப்போது வெளியிடப்பட்டது மகா கொடூரமான செயல்கள். பிற இடங்களில் ஜப்பானியர்களின் மகா கொடுமையான செயல்களைக் குறித்துத் தெரிந்தவர்களுக்கு, இவை ஆச்சரியமாகத் தோன்றவில்லை. இப்படிப் பட்ட கொடுஞ் செயல்களாற்றுகிறவர்களை ஜப்பானிய அதிகாரிகள் மன்னிப்பது மட்டுமன்றி, மேலும் கொடுமைகளை இழைக்கும்படித் தூண்டுகிறார்கள். கொரியாவுக்கும் இதே கதி தான் நேர்ந்தது. ஜப்பானியர்கள் கொரியாவைக் கொள்ளையாடிக் கொடுமைப் படுத்தியதே ஒரு தனி அத்தியாயமாகும், ஜப்பானிய அரசாங்கத்தார் கொடுத்துள்ள புள்ளி விவரங்களைக் கொண்டு பார்த்தாலும், 1913 முதல் 1918-க்குள் 294,000 கொரியர்கள் சவுக்கடி பட்டார்கள். இவர்களில் சிலர் இந்தச் சவுக்கடியால் மடிந்தார்கள். மஞ்சுகோ ஒரு ‘ சுயேச்சை ’’ நாடென்று சொல்லப்படுகிறது. “கூட்டு முன்னேற்ற நாட்டிற்கு” ஒரு உதாரணமென்றும் சொல்லுகிறார்கள். இங்கேயும் ஜப்பானியர் செய்யும் கொடுமைகள் பெரிதும் அருவருக்கத் தக்கன.

அம்லிடோ வெஸ்பா என்பவர் ஒரு இத்தாலியர். முசோலினியைப் பின் பற்றுகிறவர். இவர் “ஜப்பானிய இரகசிய ஏஜெண்டு” என்னும் புத்தகமொன்றை எழுதி வெளியிட்டார், இந்தக் கொடுமைகளை யெல்லாம் அவர் அதில் வெகு தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார். அந்தப் புத்தகத்தின் முகவுரையில் ஜப்பானியர்களின் கொடிய அக்கிரமங்களைக் குறித்து அவர் எழுதியிருப்பதாவது :—

“உண்மையை வெளிப்படுத்துவேன்; ஜப்பானிய இராணுவத் தலைவர்களுடைய நெற்றிகளில் ‘துரோகிகள்’ என்னும் பட்டத்தைக் கட்டுவேன் என்று நான் கொடுத்திருந்த உறுதி மொழியை நிறைவேற்றும் பொருட்டுத் தான் இந்தப் புத்தகம் எழுதப்படுகிறது. ஜப்பானிய இராணுவ உத்தியோகஸ்தர்கள் கொள்ளைக்காரர்கள் என்ற உண்மையை உலகினருக்கு உணர்த்த வேண்டுமென்பது தான், இந்தப் புத்தகத்தின் நோக்கம். இவர்கள் அளவிட முடியாதபடி மகா இழிவான காரியங்களைச் செய்ய, கொஞ்சமும் பின் வாங்கமாட்டார்கள். மஞ்சூரிய மக்கள், அன்பின் பெயராலும், நாகரிகத்தின் பெயராலும், நீதியின் பெயராலும் இவர்களுடைய கொடுங்கோன்மைக் குட்பட்டு எவ்வளவு தூரம் நசுங்குகிறார்களென்றும் இப் புத்தகம் கூறுகிறது.”

இந்தப் புத்தகம் இயல்பாகவே ஜப்பானியருடைய கோபத்தீயை மூட்டியது. பிறகு, இந்த நூலாசிரியரான வெஸ்பாவை பிலிப்பைன் தீவுகளில் ஜப்பானியர்கள் பிடித்து, ஒரு கூண்டில் அடைத்து வைத்திருந்தனர்.

நாங்கிங்கில் ஜப்பானியர்கள் நிகழ்த்திய அக்கிரமங்களைக் குறித்து எட்வர்ட் ஸ்டெர்லிங் என்பவர் சத்தியஞ் செய்து சாட்சியங் கூறியவர்களில் ஒருவர். இவர் ஒரு நாஜி ஜெர்மன் நிருபர்.

சென்ற வருஷம் ஹாங்காங்கில் ஜப்பானியர்கள் நிகழ்த்திய மிருகச் செயல்களைக் குறித்து மிஸ்டர் ஈடன் வெளியிட்ட போது, ஜப்பானியர்கள் கேவலமான முறையில் பதில் கொடுத்தார்கள். பிலிப்பைன் தீவுகள் சம்பந்தமாக அவர்கள் முன்பு கூறிய அதே பாடத்தை, ஹாங்காங் சம்பந்தமாகவும் பாடினார்கள். அதாவது, முன்பு பிலிப்பைன் தீவில் அமெரிக்கர்கள் தாமே வந்து தம்மோடு போராடாமல், பிலிப்பைன் வாசிகளைக் கொண்டு போராடியது போலவே, ஹாங்காங்கிலும் பிரிட்டிஷ் படைகளே வந்து தம்மோடு போராடாமல், இந்தியப் படைகளைக் கொண்டு போராடியது என்று, புகலான் பதிலளித்தார்கள். இப்படிப்பட்ட தற்காப்பு முறைகளை நேசநாட்டினர் ஏன் கையாளுகிறார்களென்று விளக்க வேண்டுமென்று ஜப்பான் கவலைப்படவில்லை. இப்போது, தம் வசம் யுத்தக் கைதிகளாயிருக்கும் இந்தியர்களை ஜப்பானியர் எப்படி நடத்துகிறார்களென்று மிஸ்டர் ஈடன் வெளியிட்டிருக்கிறார். இரண்டு வாரங்களுக்கு முன்பு அவர் வெளியிட்ட அறிக்கையில் அவர் கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார் :—

"பர்மாவில் பிடிப்பட்ட அநேகம் இந்திய சிப்பாய்களை பின்புரம் கையைக் கட்டி, கூட்டங் கூட்டமாக தெருப்புரங்களில் உட்கார வைத்து, பின்புரமிருந்து ஒவ்வொருவரையும் சாதாரணமாக மூன்று முறை ஈட்டியால் குத்திக் கொன்றார்கள். மயங்கிக் கிடந்த ஒருவர் இறந்து விட்டாரென்று நினைத்து ஜப்பானியர்கள் போய் விடவே, ஆச்சரிய வசமாக அவர் தப்பி, மீண்டும் நம் பாசறைக்கு வந்து சேர்ந்தார். அவர் வாயிலாகத் தான் இந்த விவரங்கள் நமக்குக் கிடைத்தன."

ஜப்பானியர் வசமிருந்து தப்பி வந்த சில யுத்தக் கைதிகள் மூலமாகத் தான், அவர்களுடைய மிருகத்தனமான செயல்கள் வெளி உலகத்திற்குத் தெரிய வந்தன. இது வரை, அவர்கள் நிகழ்த்திய மிருகச் செயல்கள் பற்றிக் கிடைத்துள்ள சாட்சியங்கள் இன்னும் வெளியிடப்படவில்லை. இதற்குக் காரணம், சமீபத்தில் இந்தியா அரசாங்கத்தார் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது :

"ஜப்பானியர்களின் அதிக்கிரமங்களைக் குறித்து வெளியிடுவதனால், ஜப்பானியர்களிடம் யுத்தக் கைதிகளாகவும் அடைபட்டும் கிடைக்கிறவர்களின் உறவினர்கள் மனம் மிகவும் துன்பப்படும். அன்றியும், அவற்றை வெளியிடுவதனால் அவர்கள் வசமிருக்கிறவர்களை மேலும் அவர்கள் கொடுமைப் படுத்தக் கூடும், ஆகவே தான் இந்தியா அரசாங்கமும் மாட்சிமை தங்கிய மன்னர் பிரான் அரசாங்கமும், மற்ற நேச நாட்டு அரசாங்கங்களும் இது வரை அவை பற்றி வெளியிடவில்லை. மேலும், ஜப்பானிய அரசாங்கத்திற்குக் கடிதங்கள் எழுதித் தெரிவித்துக் கொள்ளுவதனாலே, அவர்களிட மிருக்கும் யுத்தக் கைதிகளையும் அடைபட்டுக் கிடப்பவர்களையும் சற்று அன்பாக நடத்துவார்களென்றும், அந்தக் கைதிகளாயுள்ளவர்களின் கொடிய நிலைமையும் சற்று மாறும் என்று எதிர் பார்க்கப்பட்டது. இந்த முயற்சிகளெல்லாம் பயனற்றுப் போயின என்பது பற்றி இந்தியா அரசாங்கம் தெளிவாக உணர்ந்து கொண்டது. இந்தக் கொடுமைகளை விளம்பரப் படுத்தாத காரணத்தால், ஜப்பானியர்கள் ஊக்கங் கொண்டு, மேலும் கொடுமைப் படுத்துகிறார்கள். அவர்களிடம் சிக்கியுள்ள யுத்தக் கைதிகளிலும் அடைபட்டுக் கிடைப்பவர்களுக் குள்ளும் பெரும்பாலோர் இந்தியர்கள் தான்."

தாம் எது வேண்டுமானாலும் செய்யலாமென்றும், தட்டிக் கேட்க ஒருவரு மில்லையென்றும் ஜப்பானியர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் கொடுஞ் செயல்களைக் கண்டித்து நேச நாடுகளின் தலைவர்கள் பேசியிருக்கிறார்கள். "இந்தக் கொடுமைகளைக் கேட்ட ஒவ்வொருவரும் திடுக்கிட்டுப் போனார்கள்" என்று அமெரிக்கத் தலைவர் பத்திரிகா நிருபர்களிடம் பிப்ரவரி மாதம் 1-ம் தேதி கூறினார். இப்படி அக்கிரமம் செய்கிறவர்களைத் தனித் தனியாக விரட்டிப் பிடித்து கட்டாயம் தண்டிக்கத் தான் போகிறோமென்றும் கூறினர்.

# தேசியப் போர் முனை

## ராம தீபம்

| | | |
|---|---|---|
| படுக்கையறை விளக்கு | .. .. | அணு 9 |
| படுக்கையறை லாந்தர் | .. .. | ரூ. 1 |
| கைவிளக்கு | .. .. | அணு 2 |

குறிப்பு :

3 அவுன்ஸ் கடலை எண்ணெய் விலை 1 அணு. இது 21 மணி நேரம் எரியும். ஆகவே, தினந்தோறும் 3 மணி நேரம் விளக்கெரித்தால் சுமார் 5 அணு எண்ணெயைக் கொண்டு, ஏழைகள் ஒரு மாதம் முழுதும் விளக்கெரிக்கலாம்.

# ஹிட்லருக்கு குண்டு சத்தந்தான் சங்கீதம்

## மித்ரபேத முயற்சி பலிக்கவில்லை

### ஜப்பானிய அதிபதிகளின் கலக்கம்

(ராவ் சாகிப் டி. எஸ். நடராஜ பிள்ளை.)

“முன்னே கடி; பின்னே உதை” என்று நாம் அடிக்கடி சொல்வதுண்டு. இது ஹிட்லர் விஷயத்தில் எவ்வளவு பொருத்தமுடையதாயிருக்கிறதென்று பாருங்கள். கிழக்கே சூரியோதயமாவதை ருஷ்ய குண்டுகள் தெரிவிக்கின்றன. முன் காலத்தில் அரசர் யாழ், குழல் முழக்கமோடு எழுந்திருப்பது வழக்கம். ஹிட்லர் ருஷ்ய குண்டுகள் அதிர்ந்து ஆரவாரிக்க எழுகிறார். மேற்கே சூரியன், நேச தேச குண்டுகள் இத்தாலியிலும், ஆக்கிரமிக்கப் பட்ட பிரெஞ்சு நாடுகளிலும் அதிரும் ஒலியோடே மறைகிறான். அவைகளின் தாலாட்டோடு ஹிட்லரும் தூங்க வேண்டியிருக்கிறது. ஒருவருடைய துணையில்லாமல் தனியே இருந்து மனநோய் அடையும் மனிதன், தற்காலத்தில் ஹிட்லரைத் தவிர வேறொருவரும் இல்லையென்று நியூயார்க் டைம்ஸ் (New York Times) பத்திரிகை கூறுவது உண்மையாய்த் தோன்றுகிறது. அவர் சமீபத்தில் செய்த பிரசங்கங்களினால், அவருடைய மன நிலையும், ஜெர்மனியின் பிற்கால கதியும் நன்றாய் விளங்கும்.

#### ஹிட்லருடைய புது வருஷச் செய்தி

1944-ம் ஆண்டு தொடக்கத்தில், புது வருஷ உத்தாவிலே அவர் பின்வருமாறு பேசினார்:—‘1944-ம் ஆண்டு மிகவும் கடினமான வருஷம். இதற்கு முன் நான் நமது படையின் பின்புறமும் நமக்குச் சிறந்த படைப் பலம் இருக்கவேண்டுமென்றேன். இப்போது முன்புறமும் (அதாவது) ருஷ்ய பிரதேசத்திலும் அப்படிப்பட்ட படைப் பலம் இருக்க வேண்டியதாயிருக்கிறது. இதனால் பின்னால் (அதாவது மேற்கே) இருந்த சேனையை மாற்றி, மற்றைய இடங்களுக்கு அனுப்ப வேண்டியதாயிற்று. இது தான் உங்களுடைய கஷ்டங்களுக் கெல்லாம் காரணம். படையில் சேர்ந்த வீரர்கள் நன்மைக்கும் சரி, தீங்குக்கும் சரி, படையோடு அவர்கள் சாஸ்வதமாக பிணைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று உணர்ந்திருக்கிறார்கள்’ என்று சொன்னார். இதை ஆராய்ந்து பார்த்தால் பல உண்மைகள் வெளியாகும். முதலாவதாக அவர் இது வரையில் பேசிய ஆடம்பரப் பேச்சல்ல இது. இது அடிபட்டு நலிந்தவர் பேச்சு. 1944-ம் ஆண்டில் தன் நாட்டிற்குக் கஷ்டம் என்பதை அவர் வெளிப்படையாய்த் தெரிவிக்கிறார். பின்னாலிருந்த படைப் பலம் முன்னால் கொண்டு போகப்பட்டது என்பதனால், ருஷ்யாவில் அவருக்குத் தோல்வி ஏற்பட்டுவிட்டதென்பது விளங்குகிறது. அதையும் அவர் ஒத்துக் கொள்கிறார். அப்படிப் படையை ருஷ்யாவுக்குக் கொண்டு போனதால், ஜெர்மானியருக்கு இடர்ப்பாடு உண்டாயிற்று என்பதனால், ஜெர்மனியில் பிரிட்டிஷ் ஆகாயப் படை செய்து வரும் அளவில்லாத சேதத்தை ஒப்புக்கொள்வதாயிற்று. ஒப்புக்கொள்வதோடு அதற்காகத் தன்னுடையாருக்கு அவர் ஒரு சமாதானமும் சொல்லவேண்டிய அவசியம் உண்டாகிவிட்டதையும் அது தெரிவிக்கிறது. மூன்று நாட்களுக்கு முன் அவர் செய்த பிரசங்கத்தில், அவர் இதைப் பற்றியும் பேசி இருக்கிறார். ஜனவரி 30-ந் தேதியில் ‘எதிரிகள் வெடி குண்டுகளைச் சொரிவதால் நாம் செயலற்று வீழ்ந்து விடுவோம் என்று நினைக்கிறார்கள். ஆனால் நம்முடைய ஜனங்கள் இதனால் இன்னும் பலப்படுத்தப்பட்டு, பலமானதும் ஊழிக்காலம் நிலை நிற்பது மான ஒரு அமைசை நிலைநாட்ட அவர்கள் உதவி புரிவார்கள்’ என்றார். அவருடைய ஒவ்வொரு வார்த்தையும் அவருடைய பயத்தையும், கவலையையும் தெரிவிக்கின்றது.

#### ஜெர்மனியில் மிதமிஞ்சின சேதம்

வெடி குண்டுகள் மிதமிஞ்சிய சேதத்தை உண்டாக்கி இருப்பதை நாம் அறிவோம். பெர்லின் நகரத்தில் மட்டும் மூன்றில் ஒரு பங்கு அழிந்து போய்விட்டது. இன்னும் போர்த் தளவாடங்களைச் செய்யும் எஸ்ஸென் லுட்விக்ஸேவன் முதலிய பல பட்டணங்கள் படிப்படியாக நிர்மூலமாகி வருவதையும் நாம் அறிவோம். இதனால் பட்டணத்துக்கு நாசம் என்பது மட்டும் அல்ல; போர்ப் பிரயத்தனங்களும் நிலை குலையும். இவைகளைத் திருத்த (ரிப்பேர் செய்ய) இன்னும் வேறு முயற்சிகள் வேண்டும். ஜெர்மானியர் செயலற்று வீழ்ந்துவிடுவார்களோ என்று அஞ்சிய ஹிட்லரின் கூக்குரல் நமது காதுகளில் ஒலிக்கின்றது. ஊழிக்காலம் நிற்கும் அமைசை இனி ஜெர்மானியர் ஸ்தாபிக்க முடியாதென்பதை அதே கூக்குரல் வெளியிடுகின்றது.

#### ஹிட்லர் மாறுட்டத்திற்குக் காரணம்

1940–41-ல் உலகத்தை அதட்டிப் பேசிய கம்பீரக் குரல் எங்கே, 1944-ல் பேசும் அச்சந் தாங்கிய ஈனசுரமெங்கே? அரசியலுக் குரிய சாம, பேத, தான, தண்டங்களிலே தண்டத்தைக் கையேந்தி நின்றார் அக்காலையில், இப்போதவர் பேதத்தைக் கையாள முயலுகிறார். தான் வெல்ல முடியாதென்று தெரிந்து விட்டதால் தான், இவ்வகை மாறுட்டம். நேச தேசத்தாருக் கிடையே குட்டிக் கலகத்தை ஏற்படுத்திவிட்டு, ருஷ்யாவைத் தனியே பிரிக்க முயலுகிறார் இப்போது. ஜனவரி 30-ல் பேசிய பேச்சில், இந்தச் சண்டையின் முடிவு என்னவானாலும், ஒன்று மட்டும் உண்மை. ஆங்கிலேயர் ஐரோப்பாவில் தங்களுக்கிருந்த உயர்ந்த நிலையை இப்போது இழந்து விட்டார்கள் என்று கூறுகிறார்.

#### அதிகாரக் குரல் அழுகுரலானது

இனிப் பேச்செல்லாம் ருஷ்ய அரக்கருக்கு வெற்றியா அல்லது ஒரு குடும்பமாகிய ஐரோப்பிய நாட்டாரில் வல்லமை பொருந்திய ஜெர்மானிக்கு வெற்றியா என்பது தான். ஜெர்மனி வென்றால் ஐரோப்பா தன்னிலை குலையாமல் இருக்கும். ருஷ்யா வென்றால் ஐரோப்பா நிர்மூலமாகும், என்று பலபடப் பேசினார். எனவே, ‘ருஷ்யா ஜெர்மனியை வென்று, ஆங்கில நாட்டிலும் அமெரிக்கரிடையும் பொதுவுடைமைக் கொள்கைகளை நாட்டும். அச்சமயம் அவர்கள் ருஷ்யாவோடு போராட முடியாமலிருப்பதோடு தங்கள் உள் நாட்டுக் கலகத்திலேயும் ஈடுபட்டு அழிவார்கள். அதனால் அவர்கள் ருஷ்யர்களை நம்பக்கூடாதென்றும், அவர்களை அழிக்கத் தனக்கு உதவி புரிய வேண்டு’ மென்றும் சொல்லிப் பார்க்கிறார். இது இவருடைய தற்கால நிலைமை. இப்பேச்சால், ஹிட்லர் தன்னுடைய நாட்டாரை அச்சமுறுத்தி அதிகமாய் பாடுபடத் தூண்டுவது ஒரு புறம், நீடித்த நாள் வரையில் இப்போரை இழுக்கடித்து, எல்லோரும் களைத்திருக்கும் சமயம் தனக்கதிகக் கெடுதலில்லாத ஒரு சமாதானத்தை அடையலாமென்பது, மற்றொரு புறம். என்ன விருந்தபோதிலும், அதிகாரக் குரல் போய் அழுகைக் குரலாய் மாறிவிட்டது.

#### டோஜோ புலம்பல் படலம்

இவருடைய நிலைமை இப்படியாக, ஜப்பானிலே டோஜோவின் நிலைமை எப்படி இருக்கிறதென்று சற்றே ஆராய்வோம். ஹிட்லர் எஃகினால் ஏற்படுத்திய பாதையில் எளிதே நடந்து அவருடன் இந்தியாவிலே நின்று கை குலுக்கலாமென்று எண்ணிய அவர் எண்ணம், பாழாகிறது. ஹிட்லருடைய கோட்டைக்கே; கிழக்கு, மேற்கு, தெற்கில் பல வழிகள் ஏற்பட்டு விட்டதைக் கண்டு இவர் திடுக்கிடுகிறார். அவர் சொன்னது போல் இருவரும் ‘ஜப்பானியர் இப்போது மிகவும் நெருக்கடியான ஒரு காலத்தில் வந்து நிற்கிறார்கள். ஆங்கிலேயரும், அமெரிக்கர்களும் நமக்கு மாறாக எதிர்க்க ஆரம்பித்ததிலிருந்து, சண்டையில் வெற்றியை அறுதியிடும் காலம் கிட்டிவிட்டது’ என்றார் 1944-ம் ஆண்டு ஆரம்பத்தில் அவர்களுடைய சட்ட சபையில் சமீபத்தில் பேசும்போது ‘கடலில் நமக்குண்டாயிருக்கும் சேதத்தைக் குறைவுபடுத்திச் சொல்வதற்கில்லை. கப்பல்களின் அழிவைக் குறைக்க விமானங்களின் துணை பயன்படுத்தப்படுகிறது’ என்றார். கப்பல்களையும், அவைகளின் நாசத்தையும் பற்றிப் பேசுவானேன் என்றால்

(6-பக்கம் பார்க்க.)

# யுத்தகாலத்தில் அரசாங்க உதவி

## இராமநாதபுரம் ஜில்லா

**உணவுப் பிரச்சினை.**—முன் போல் ஏழை மக்களுக்கென ஏற்பட்டிருக்கும் தானிய டிப்போக்கள் பட்சபாதக மின்றி உணவுப் பொருள்களை விநியோகித்து வருகின்றன. இராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள முனிசிபாலிடி உள்ள ஊர்களிலெல்லாம் பங்கீட்டுத் திட்டம் கூடிய சீக்கிரம் அமுலுக்குக் கொண்டு வரப்படும் அதற்கென ஏற்பட்டிருக்கும் பங்கீட்டு உத்தியோகஸ்தர்கள், திட்டத்தை வெற்றிகரமாக நடத்துவதற்குரிய முதல் வேலைகளைச் செய்து வருகின்றார்கள்.

**துணிப் பிரச்சினை.**—ஜில்லா துணிக் கட்டுப்பாடு உத்தியோகஸ்தரும், துணிகளில் முத்திரை வைப்பதற்கென நியமிக்கப்பட்டிருக்கும் ரெவினியூ இன்ஸ்பெக்டர்களும் வியாபாரிகள் பொது ஜனங்களை ஏமாற்ருது கவனித்து வருகிறார்கள்.

இதர கட்டுப்பாடுப் பொருள்கள் ஜனங்களுக்கு இலகுவாகக் கிடைத்து வருகின்றன.

யுத்தங் காரணமாக பர்மா, மலேயா முதலிய நாடுகளிலிருந்து வந்திருக்கும் ஜனங்களுக்குக் கூடுமான வரையில், பண உதவியோ அல்லது உத்தியோக உதவியோ செய்யப்பட்டு வருகின்றது.

இராணுவத்தில் சேர்ந்தோரின் குடும்பங்களுக்கு, தகுந்த உதவி அளிக்கப்படுகிறது. விருதுநகர் வெற்றி மண்டபத்தின் பாது காப்பாளராக இந்திய கப்பற் படையில் சேர்ந்திருக்கும் ஒருவருடைய தகப்பனார், இராமநாதபுரம் ஜில்லா அமைப்பாளர் நியமித்திருக்கிறார்.

## வட ஆற்காடு ஜில்லா

சென்ற ஜனவரி மாதத்தில், ஜில்லா சிப்பாய் குடும்பப் பாதுகாப்பு சபையாரால், வடுவன்தாங்கல் (குடியாத்தம் தாலூக்கா); சேத்துப்பட்டு, போளூர், முதலிய மூன்று இடங்களில் சிப்பாய் குடும்பங்களுக்கு உணவுப பொருள்கள் சப்ளை செய்யும் டிப்போக்கள் திறந்து வைக்கப்பட்டன. ஜில்லாக் கலெக்டர் அவர்கள் மூன்று இடங்களிலும், அன்புடன் திறப்பு விழாவில தலைமை வகித்து டிப்போக்களைத் திறந்து வைத்தார்கள் ஜில்லா தேசீயப் போர் முனை அமைப்பாளரும், இதர ஜில்லா அதிகாரிகளும், வடுவன்தாங்கல் டிப்போ திறப்பு விழாவில் கலந்து கொண்டனர். தேசீயப் போர்முனைப் பிரசார வண்டி இனிய கீதங்களைக் கொண்டு, குழுமிய பொது மக்களுக்கும், சிப்பாய் குடும்பத்தார்களுக்கும், இன்பம் அளித்தது.

இந்த ஜில்லாவில் மக்களுக்கு உணவுப் பொருள்கள் கஷ்டமின்றிக் கிடைத்து வருகின்றன. அரிசிப் பங்கீடு முறையை, ஜில்லாவில் உள்ள முனிசிபல் டவுன்களில், இம்மாதத்தில் அமுலுக்குக் கொண்டுவர ஏற்பாடுகள் பூர்த்தி ஆகி வருகின்றன. குறுகிய சுயநல மனப்பான்மையை விட்டொழித்து, இப் பங்கீடு முறையின் உண்மைத் தத்துவத்தை உணர்ந்து, அரசாங்க உத்தியோகஸ்தர்களுடன் ஒத்துழைத்து, அரிசிப் பங்கீடு முறையை வெற்றிகரமாக நடத்தவேண்டியது, பொது மக்களுடைய கடமையாகும். "எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே யல்லாமல், வேறொன்றறியேன் பராபரமே." இதுவே பெருங்குடி மக்களாகிய நம்முடைய பெரு நோக்கம். இவ்வுன்னத நோக்கத்துடன், போர்ப் பணித் துறைகளில் பெரும் பங்கெடுப்போமாக! உலக மக்களின் நன்மைக்கு உழைத்து, உயர் நிலை அடைவோமாக!

## சென்னை—1944-ம் வருஷம் ஜனவரி மாதம்.

இம்மாதத்தில் சென்னையில் பெரியதோர் விறகு நெருக்கடி ஏற்பட்டு விட்டது. மக்கள் ஆயிரக் கணக்கில் சென்னை வெற்றி மாளிகையை முற்றுகை யிட்டுக் கொண்டு, தங்களுக்கு விறகு தேவை என கூப்பாடிட்டனர். சென்னை மாகாண அமைப்பாளர் காப்டன் ஆர்வி துரைமகனார், சென்னை நகர அமைப்பாளர் ராவ் சாகிப் ஆல்பர்ட் ஜேசுதாசன் அவர்களுடன் இது காரணமாய் மிகவும் சஞ்சலமடைந்து, ஆவன செய்வோமெனக் கூறி, ஆதரவளித்தனர்.

2. சென்னையில் தேசீயப் போர்முனையில் 5 விறகு தொட்டிகள் வைத்து இது வரையில் பொது மக்களுக்கு, குறிப்பாக தொழிலாளர்களுக்கு, விறகு நியாயமான விலைக்கு, சரியான அளவில் கொடுத்து வரப்பட்டது. விறகு நெருக்கடி அதிகமாகி விடவே, அநேகர் இது விஷயமாய் பெருங் கூக்குரலிடவே, மற்றும் மூன்று விறகு தொட்டிகளை உடனே திறப்பதற்கு அரசாங்க அனுமதி பெற்று தொழிலாளர்கள் வதியும் பேட்டைகளாகிய, புளியந்தோப்பு, புதுப்பாக்கம், பெரம்பூர் இவ்விடங்களில் விறகு தொட்டிகள் தேசீயப போர்முனையின் ஆதரவில் துவக்கப்பட்டன.

ராவ் சாகிப் ஆல்பர்ட் ஜேசுதாசன் அவர்கள் ராயபுரம் வீட்டை தினமும் ஆயிரக் கணக்கான மக்கள் சூழ்ந்து கொண்டு, தங்களுக்கு விறகு அளிக்க வேண்டும் அல்லது சாப்பாடு போட வேண்டும் என முறையிட்டு வந்தனர். ராவ் சாகிப் அவர்களும் ஆபீஸ் மானேஜர் ஜனாப் சையட் இப்ரஹீம், திரு. கே. கலியாணசுந்தரம், திரு பி. தியாகராஜன், திரு. சீனிவாச ராவ் முதலியோர், தலைக்கு ½ குண்டு விறகுக்கு சீட்டு கொடுத்து, தேசீயப் போர்முனை விறகு தொட்டிகளில் வாங்கிக் கொள்ள ஏற்பாடு செய்தார்கள்.

---

(5-ம் பக்கம் தொடர்ச்சி.)

அவைகளால் தான் ஜப்பானிய நாடு ஈடேற வேண்டும். தாங்கள் பிடித்துள்ள நாடுகளிலெல்லாமிருந்து, உணவுப் பொருள்களையும், மற்றும் வேண்டிய பண்டங்களையும் ஜப்பானில் சேகரிப்பவை, கப்பல்களே. ஆகவே, அவைகளின் அழிவு ஜபபானின் அழிவாகும். ஜப்பானுக்கு கப்பல்களைக் கட்டும் வல்மை மிகவும் பெரியதல்ல. அமெரிக்கர்களைப் போல் அவர்கள் நாளொன்றுக்கு 5, 6 கப்பல்களைக் கட்ட அவர்களுக்கு இரும்பும் இல்லை; வல்மையும் இல்லை. நியூகினி, சாலோமோன் முதலிய தீவுகளில் அவர்கள் அளவு கடந்து கப்பல்களை இழந்து விட்டிருக்கிறார்கள். டோஜோ மஞ்சுகோவிலிருந்து நமக்கு வற்ருத உணவுப் பொருள் சப்ளை கிடைக்கும் என்று சொன்னாலும் அவைகளைக் கொண்டுவரக் கப்பல்கள் வேண்டும். ஜப்பானியர் தாங்கள் வெற்றி யடைவதில் அவ்வளவு நம்பிக்கை கொண்டில்லை என்பது டோஜோவின் பேச்சால் ஏற்படுகிறது 'உலகத்தார் எல்லாம் தங்கள் முழு பலத்தைக் கொண்டு போரிடுகிறார்கள். வெற்றி யானது, இறுதி வரையில், யார், தாங்கள் தான் வெல்வோம் என்று நம்பிக்கை வைத்து போராடும் மனோ நிலையைக் காத்து வருகிறார்களோ, அவர்களுக்கே தான் உண்டு', என்றார்.

### ஜப்பானியர் மனோ நிலை குலைகிறது

ஆகையால் ஜப்பானியருக்கு அந்த மனோ நிலை குறைந்திருக்கின்றது. என்று தெரிகிறது. மேலும் அவர் ஒரு புதுமையான பேச்சைப் பேசியிருக்கிறார். வெற்றிக்கும் தோல்விக்கும் நடுவில் மயிரிழை தான் உண்டு என்று சொன்னதோடு இந்தச் சண்டையில் இன்னும் பல கஷ்டங்களை நாம் எதிர்ப்பார்க்கவேண்டும் என்றார். இதனால் ஜப்பானிய அதிபதிகள் கலக்கத்தை அடைந்திருக்கிறார்கள், என்பது தெளிவு. வெற்றிக்கும் தோல்விக்கும் பேதமில்லை யானால் வெற்றியடைய இவ்வளவு பாடு படுவானேன்? கெய்ரோவில், ஷியாங்காய் ஷேக், சர்ச்சில், ரூஸ்வெல்ட் கூடியது உலகத்தை அபகரிக்கத் தான் என்று பொய் பேசுவானேன். அவர்கள் மூவரும், 'எங்களுக்கு நாடு பிடிக்கும் ஆசையில்லை; ஜப்பானியர் ஆக்கிரமிப்பைத் தடுக்கவும், அவர்களை அவர்களுடைய கொடூரத்திற்காகத் தண்டிக்கவும் தான் நாங்கள் பாடு படுகிறோம்' என்று சொன்னதை மறைப்பானேன். கிழக்கு ஆசிய சம வளர்ச்சியெல்லாம், ஜப்பானியர் வளர்ச்சி போல், உயரம் குறைவதே தான் என்று, இப்போது அனைவரும் கண்டு கொண்டதால், உலகத்தாரை ஏமாற்ற ஜப்பானியரால் இனி முடியாது என்பது திண்ணம்.

சென்னை அகில இந்திய வானொலி நிலயத்திலிருந்து பிப்ரவரி மாதம் 2-ம் தேதி ஒலி பரப்பப்பட்ட பிரசங்கம்.

### வானொலி நாட் குறிப்பு.

திருச்சி—பிப்ரவரி மீ 13 தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 7-45-க்கு "ஜப்பானிய ஆதரவு" என்பது பற்றி. கிழக்கத்திய நாட்டு இந்தியருக்கு ஒரு தமிழ்ப் பிரசங்கம்.

சென்னை—பிப்ரவரி மாதம் 16-ம் தேதி மாலை 7-மணிக்கு "அச்சுப் பிரசார ஆராய்ச்சி" என்பது பற்றி மிஸ்டர் டி. ஏ. வி. நாதன் பேசுவார்.

# நரியா? எலியா? பிசாசா? ராக்ஷசனா?

பர்மா எல்லையிலே இந்திய, பிரிட்டிஷ், அமெரிக்க, சீனப் படையினர் கூடியிருந்து, வெகு தந்திரமாக, பர்மிய மலைகளை ஒவ்வொன்றாகப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள் அல்லவா? இந்தப் படைகளைச் சேர்ந்த ஒருவர், ஏதோ உடம்பு அசௌக்ய மாகி லீவிலே வந்தாராம் இந்தப் பக்கத்திற்கு. அப்பொழுது அவரை அவரது நண்பர்கள் சூழ்ந்து கொண்டு ஆயிரம் கேள்விகள் கேட்டு விட்டார்களாம். அவர்களனைவரும் ஜப்பானிய சோல்ஜர்களைப் பற்றித் தெரிந்து கொள்ள ரொம்ப ஆவலாக இருந்தார்களாம்.

'ஜப்பான்காரனுடைய குணம் தான் என்ன?' என்று கேட்டாராம் ஒரு நண்பர்.

'இப்படிப் பொதுவாகக் கேட்டால், நான் பதில் சொல்லுவது கொஞ்சம் சிரமம் தான். ஐயா! ஒரு குரங்கு போலவோ ஒரு பன்றி போலவோ, ஒரு புலி போலவோ அவனிருந்தால், குறிப்பாக நீங்கள் கேட்ட கேள்விக்கு சட்டென பதில் சொல்லி விடலாம். ஜப்பான்காரன் செய்கிற வேலைகளைப் பார்த்தால், அவனை ஒரு குள்ள நரி என்றோ, எலி என்றோ, ஒரு பிசாசு என்றோ, ஒரு ராக்ஷஸன் என்றோ திட்டமாகக் கூற முடியவில்லை. ஆனால், மேலே சொன்ன நரி, எலி, பிசாசு, ராக்ஷஸ குணங்களத்தனையும் அவனிடம் கலந்திருக்கின்றன. பச்சோந்தியின் நிறம் போல், இந்தக் குணங்கள் மாறிக் கொண்டேயிருக்கின்றன' என்றாராம் அவர்.

### தந்திரக்கார ஜப்பானியர்

அவர் சொன்னது வாஸ்தவந் தான். ஜப்பானியர்கள் தந்திரக்காரர்கள் தான். பதுங்கிப் பதுங்கித் தான் வேலைகள் செய்வார்கள். கூடியவரை தங்கள் குட்டு வெளியாகாமல் பார்த்துக் கொள்ளுவார்கள். பையிலிருப்பது நாலே நாலு காசானாலும்; 'இருக்கு, வேண்டிய பணம்! என்னன்னு நினைச்சிக்கிட்டே தம்பி? எவ்வளவு வேணும் உனக்கு? உம் சொல்லு! இப்பவே தர்ரேன்! ஏதோ ஏகாதசின்னு நினைச்சிக்கிட்டியா? இதோ பார்!' என்று சும்மா பையைக் குலுக்கிக் குலுக்கி அமுத்தல் செய்யும் ஆட்களைப் போல, வெறும் பேச்சாலேயே ஆகாசப் பந்தல் போடுவார்கள். அந்தப் பந்தல் என்ன வெயிலை மறைக்குமா? மழையைத் தடுக்குமா?

### சரக்கு ஏது?

போன வாரமும் சரி, போன வருஷம் தீபாவளிக்கு முன்னாலும் சரி, 1942 ஆரம்பத்திலுஞ் சரி; ஜப்பான்காரன் இந்தியா நகரங்கள் மீது குண்டுகள் வீச வந்தானே, எத்தனை விமானங்களில் வந்தான்? ஒவ்வொரு தடவையும் ஒவ்வொரு விமானத்தில் தான்! தென் மேற்கு பஸிபிக்கிலும், இப்பொழுது மத்ய பஸிபிக்கிலே மார்ஷல் தீவுகளிலும், ஜப்பானியரை வானத்திலும் தரையிலும், கடலிலும் நேச தேசத்தார் அடித்து நொறுக்கிக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பிரதேசங்களிலே ஜப்பானியர் இழந்த விமானங்கள் எண்ணற்றவை. விமானங்களை மட்டுமல்லாமல், தீவுகள் பலவற்றையும் ஜப்பானியர் இழந்து வருகிறார்கள். நாளுக்கு நாள் நேச தேசத்தாரின் சக்தி மளமள வென ஏறிக் கொண்டேயிருக்கிறது. செழிப்பான அவரைக் கொடி வீசுவது போல, அதி ஜோராகவும் செழிப்பாகவும் நேச தேசப் படைகள் எங்கும் பரவிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, ஜப்பானிய விமானங்கள் எல்லாம் அந்தப் பிரதேசங்களில் மாட்டிக் கொண்டு முழிக்கின்றன. ஆகவே, இந்தியா மீது படையெடுக்கவோ, அடிக்கடி வந்து குண்டு வீசவோ ஜப்பானியரிடம் விமானங்கள் நிறைய ஏது? சட்டியில் இருந்தால் தானே அகப்பையில் வரும்? சட்டியிலே ஏதோ கொஞ்சம் கூட்டு ஒட்டிக் கொண்டிருந்தால், அதைச் சுரண்டித் தானே உதிர்க்க வேணும்! அதுவும் எவ்வளவு நேரம் செய்து கொண்டிருக்க முடியும்? நானும் இருக்கிறேன் என்பதைக் காட்டிக் கொள்ள, ஆடிக் கொரு நாள், ஆவணிக் கொரு நாள், மாசிக் கொருதினம், மார்கழிக் கொருதினம் ஒவ்வொரு விமானம் இந்திய மண் மீது பறப்பதும், எங்காவது வயல் வெளிகளிலோ, பொட்டல் பிரதேசங்களிலோ நாலு குண்டுகளை கண்ணை மூடிக் கொண்டு போட்டு விட்டுப் போவது மாக இருக்கிறார்கள் அவர்கள்.

### படையெடுப்பது சாத்தியமில்லை

இனி அவர்கள் இந்தியா மீது படையெடுக்கலாம் என்று கனவிலும் நினைக்க வேண்டியதில்லை. நினைக்கவும் மாட்டார்கள். ஜப்பானியர்கள் அவ்வாறு நினைக்க அவ்வளவு அசடுகளோ என்ன? இரண்டு வருடங்களுக்கு முன்பு வேண்டு மானாலும் சொல்லுங்கள்; அஸ்ஸாம் பர்மிய எல்லையிலும் சரி, இந்தியாவின் இதர பாகங்களிலும் சரி பாதுகாப்பு ஏற்பாடுகள் பச்சைக் குழந்தைப் பருவத்திலிருந்தன. அப்பொழுது ஜப்பானியர் புகுந்தடித்திருந்தால், காவலற்ற ஆட்டுக் குட்டி மந்தைக்குள் ஓநாய் புகுந்தால் அதன் பாடு எவ்வளவு சுலபமாக இருந்திருக்குமோ அவ்வளவு சுலபமாக இருந்திருக்கும் அவர்களுக்கு! ஆனால், இப்பொழுதோ, நேச தேசப் படைகளின் எண்ணிக்கை பல லக்ஷக் கணக்கில் இருக்கின்றன. இந்தியாவிலேயே பல லக்ஷக் கணக்கிலே வாலிபர்கள் தாமாகவே விரும்பி வந்து இராணுவத்தில் வந்து சேர்ந்திருக்கிறார்கள். யுத்தம் ஆரம்பம் ஆன போது, இந்தியப் படையிலே ஒரு லக்ஷம் பேர்கள் கூட இல்லை. அதைக் குறிப்பிட்டுக் காட்டிப் பலர் சிரிக்கவும் செய்தார்கள்.

### இன்றைய இந்திய பலம்!

ஆனால் இன்றைய இந்தியாவின் இராணுவ பலத்தை இந்திரஜித்தே உயிர் பெற்றெழுந்து வந்து பார்த்தாலும், மலைக்கத் தான் செய்வான், அடேயப்பா! ஏரோப்ளேன் ஓட்டுவதா? பீரங்கி சுடுவதா? டாங்கிகள் விடுவதா? யுத்த முனையில் பாலங்கள் கட்டுவதா? டாங்கிகள் முதல் சகல மோட்டார்களையும் நாற்புறமும் வெடிக்கும் குண்டுகளுக்கு நடுவே கலங்காது நின்று 'ரிப்பேர்' செய்வதா? துப்பாக்கியில் சொருகப் பட்ட ஈட்டிகளைக் கொண்டே எதிரிகளைக் குத்திச் சின்னா பின்னப்படுத்துவதா? 'குக்ரி' என்ற வளைந்த கத்தியைச் சுழற்றிக் கொண்டே, எதிரிகளின் குடலைப் பிடுங்கி எறிவதா? விமானங்கள், லாரிகள், ஆஸ்பத்திரிகளுக்கு வேண்டிய சாமான்கள் ஆகியவற்றைத் தயாரிக்க வேண்டுமா? எல்லாவற்றிற்கும் இந்தியர் இன்று 'ரெடி'யாக இருக்கிறார்கள்!

### இந்திய விமானிகள் சாகசம்

இந்திய விமானிகள் தனித் தனியே ஒவ்வொரு விமானத்தை ஓட்டிச் சென்று, பர்மாவிலே உள்ள ஜப்பானியர்கள் மீதும், இராணுவ முக்கியம் வாய்ந்த இடங்கள் மீதும் வெறும் படகுகள், நீராவிப் படகுகள், சிறு கப்பல்கள் மீதும் சரமாரியாகக் குண்டுகளைப் பொழிந்து விட்டு வருகிறார்கள். என்ன செய்வதென்று தெரியாது எதிரி திணறுகிறான். மழையானாலும் சரி, காற்றானாலும் சரி, இருளானாலும் சரி நிலவானாலும் சரி, பகலானாலும் சரி, இரவானாலும் சரி, எதையும் லக்ஷயம் செய்யாது, அநுதினமும் எதாவது ஒரு இடத்தை நாசம் செய்யாது சும்மா இருப்பதில்லை இந்தியர்.

### வயிற்றைக் கலக்குகிறது!

இதைப் பற்றியெல்லாம் நினைக்கும் பொழுது ஜப்பானியருக்கு வயிற்றைக் கலக்குகிறது. ஒரு வயலிலே ஒரு ஆட்டுக் குட்டி நின்று கொண்டிருந்ததாம், அதை ஒரு பெரிய கழுகு, குபீரெனப் பாய்ந்து தூக்கிக் கொண்டு போய்விட்டதாம். அதைப் பார்த்துக் கொண்டிருந்ததாம் ஒரு காக்கை. ரோம மடர்ந்த மேனியுடைய ஒரு பெரிய ஆட்டின் மீது அது தன் கண்களைப் போட்டதாம். சட்டென அந்த ஆட்டின் மீது போய் உட்கார்ந்து, அலக்ஷியமாக எண்ணி, அதை தனது பாதங்களால் பற்றித் தூக்க முயன்றதாம். அதன் சிறகுகள் பட பட வென்று அடித்துக் கொண்டதால் ஏற்பட்ட சப்தத்தைக் கேட்டு, ஆடு மேய்ப்பவர் நித்திரை கலைந்து எழுந்து பார்த்தாராம். காக்கையின் கால்கள் ஆட்டின் ரோமத்தில் நன்றாகச் சிக்கிக் கொண்டு விட்டதால், காக்கையால், அந்த ஆட்டை விட்டு விட்டுப் பறந்தோட முடியவில்லை. அதைப் பார்த்த ஆடு மேய்ப்பவர், ஒரு தடியை எடுத்து வந்து, அந்தக் காக்கையின் தலை மீது போட்டாராம் ஒரு போடு. அதோடு அந்த காக்கை 'க்ளோஸ்' ஆகி விட்டது என்று சொல்லவும் வேண்டுமா?

அதே போலத் தான், ஜப்பானியரும் செய்து கொண்டிருக்கிறார்கள். அதே காக்கை போலவே, இவர்களும் 'க்ளோஸ்' ஆகப் போகிறார்கள். இப்போதைக்கு இவர்கள் பர்மா, மலேயா, சிங்கப்பூர், இந்தோ சைனா, பிலிப்பைன்ஸ், ஜாவா, போர்னியோ, நியூ கினியா, மார்ஷல் தீவுகள், காரலைன் தீவுகள் அங்கு இங்கென்று பரந்து கிடக்கலாம். ஆனால் இவர்களை இடுப்பை முறித்து, இவர்களிடமுள்ள இடங்களையெல்லாம் பிடுங்கி, சிற கொடிந்த குருவிகள் போலாக்கிவிட வேண்டும் இவர்களை என்று திட்டம் போட்டிருக்கிறார்கள் நேச தேசத்தவர்கள். இந்தத் திட்டந்

கள் எல்லாம் நிறைவேறத் தான் போகின்றன. நீங்கள் பார்க்கத் தான் போகிறீர்கள்.

**ஜப்பானியருக்கும் தெரியும்**

இது ஜப்பானியருக்கும் தெரியும்! பலே குள்ளர்களல்லவா? இது தெரியாதிருக்குமா அவர்களுக்கு? ஒரு கௌபீனத்தை மட்டும் கட்டிக் கொண்டே, போராடுகிறார்கள் ஜப்பானிய வீரர்களில் பலர். உடுப்புக்கு வீணாகச் செலவழிப்பானேன் என்று கணக்குப் பார்க்கிறார்கள் போலிருக்கிறது. ஆனால், உடுப் பில்லாமல், வெயிலிலும் குளிரிலும், வியாதியிலும், வெக்கையிலும் சிக்கி அவஸ்தைப் படுவார்களே நமது வீரர்கள் என்று, பெரிய தலைகளாக உள்ளவர்கள் எண்ணுவார்களா? ஹூஹூம்! ஆதி முதலே இதுமாதிரி பஞ்சைகள் போல இருந்து, உலகத்தையே ஜெயித்து, ஆளலாம் என்று கனவு கண்டு வந்திருக்கிறார்கள் ஜப்பானியர். இப்படிக் கண்ட இடங்களில் எல்லாம் போய் கண் மூக்குத் தெரியாது போராட வேண்டி வரும் என்பதற்காகவே, ஜப்பானியப் பள்ளிகளிலும், போர்ப் பயிற்சிக் கழகங்களிலும், 'சுகத்தைப் பாராதே! சாவை லக்ஷ்யம் செய்யாதே! (செத்த பிறகு எப்படி லக்ஷ்யம் செய்ய முடியும்) சாகும் வரை போராடு! எதிரி கையில் சிக்கினால் என்னென்னமோ செய்வார்கள்; அதனால் உயிரோடு எதிரி கையில் சிக்காதே! உனது அரசரே உனக்கு தெய்வம். நீ தவறு செய்தால், அந்த் தெய்வத்தின் மனம் புண்ணாகும். அதனால் நீ தவறு செய்தால், நீயே தற்கொலை செய்து கொண்டுவிடு. சாப்பாட்டின்மேல் பிரியம் வைக்காதே! கிடைத்ததைக் கிடைத்த இடத்தில் வாயில் போட்டுக் கொண்டு, போராடு, (ஒன்றும் கிடைக்கா விட்டால் மண்ணையாவது தின்னு என்று கூடப் போதித்திருப்பார்கள் போலிருக்கிறது.) நாம தான் மகா புத்திசாலிகள்! மானிட வர்க்கத்தையே ஆளத் தகுந்தவர்கள். ஆளப் பிறந்தவர்கள். அகண்ட கிழக்காசியாவை ஸ்தாபிக்கும் தர்ம காரியத்தில் நாம் ஈடுபட்டிருக்கிறோம். இறுதி வெற்றி நமக்கே! என்று நன்றாகப் போதனை செய்திருக்கிறார்களாம்.

**வாயில் போட்ட சீடையைத் துப்புவார்களா?**

ஜப்பானிய வீரர்களும் இவற்றை வேத வாக்காகக் கொண்டு, உயிரை விட்டுக் கொண்டிருக்கின்றனர். அதனால், ஜப்பானியரை வெல்லுவ தென்பது கொஞ்சம் சிரமமான காரியம். சில சீடைகள் ரொம்பக் கல்போலிருக்கும். லேசில் கடிக்க வராது அதற்காக வாயில் போட்டுக் கொண்ட சீடையை யாராவது கீழே துப்புவார்களா? வாயிலே அதை கொஞ்சம் ஊற வைத்து, அப்புறம் 'கடக்' கென்று கடித்துச் சுவைத்துத் தின்னுவோமா இல்லையா?

அதே போல ஜப்பானியர் எவ்வளவு கடுமையான எதிரிகளானபோதிலும், அவர்களை லேசிலே விடப்போவதில்லை நம்மவர்கள்.

**ஆமை வேகம் ஏன்?**

பர்மா எல்லையிலே நடக்கும் போர் ஆமை வேகத்தில் அபிவிருத்தியடைந்து வருகிறதே; இது ஏன் என்று, உங்களில் சிலர் நினைக்கலாம். பர்மா எல்லைப் பிரதேசங்களைப் பற்றியும், அங்கு ஜப்பானியர் செய்துள்ள எலி, நரி வேலைகளைப் பற்றியும் தெரியாதவர்கள் தான் இவ்வாறு நினைப்பார்கள். தென் மேற்குப் பஸிபிக் பிரதேசத்திலேயும் சரி, தற்சமயம் மார்ஷல் தீவுகளிலும் சரி, நேச தேசப் படைகள் எவ்வளவு சிரமத்தோடு தீவிலிருந்து தீவாகத் தாவிக் கொண்டிருக்கின்றனவோ, அதைவிடச் சிரமமானதாக இருக்கிறது, பர்மா இந்திய எல்லையிலே ஜப்பானியருக் கெதிராக போரை நடத்துவது.

ஜப்பானியர் மகா தந்திரசாலிகள் என்பது எல்லோருக்கும் தெரியுமே! இந்தியா பர்மிய எல்லையிலே அவர்கள் செய்து வைத்திருக்கும் பாதுகாப்பு வேலைகளைப் பார்த்தால், யாரானாலும் மூக்கின்மேலே கையை வைக்கத் தான் செய்வார்கள். தேன் கூடு உடைந்து விழுந்தாலும் சரி, குளவியின் கூட்டை உடைத்தாலும் சரி. அவற்றின் உள்ளே செய்யப்பட்டிருக்கும் பிரமாதமான வேலைப்பாடுகளைக் கண்டு ஏற்படும் வியப்பே, பர்மிய எல்லையிலே, ஒவ்வொரு குன்றிலும், ஒவ்வொரு மலையிலும் செய்திருக்கும் ஏற்பாடுகளைப் பார்க்கும்போது ஏற்படும். மலைகளையும் குன்றுகளையும் எலிகள் போலவும், நரிகள் போலவும் குடைந்து தள்ளியிருக்கிறார்களாம் ஜப்பானியர். மலைச் சரிவுகளில் எல்லாம், ஏகப்பட்ட யந்திர பீரங்கிகளை வைத்திருக்கிறார்களாம். ஒவ்வொரு குன்றும் ஒரு பலமான கோட்டை போலாக்கப் பட்டிருக்கிறதாம்.

எங்கு பார்த்தாலும் ஏகப் புதர். பத்தடிக்கு அப்பாலே பதுங்கியிருக்கிறான் ஜப்பானியன் என்பதைக் கூட கண்டுபிடிக்க முடியாது, பூனைபோல் தான் வெகு உஷாராகச் செல்லவேண்டும். கொஞ்சம் சலசலப்பு ஏற்பட்டு விட்டால், ஒருவர் இருப்பது மற்றவருக்குத் தெரிந்து விடும்.

ஜப்பானியர் மரங்களில் எல்லாம் குரங்குகள் போல அமர்ந்துகொண்டு, நேசதேசப் படையினரைப் பார்த்துச் சுடுகிறார்களாம்.

மலை அடிவாரத்திலிருந்து மேலே ஏற முயலும் படைகள் பாடு என்றுமே சிரமம்தான். மேலே இருப்பவர்கள் கீழேயிருந்து வருவோரை நோக்கி, நன்றாகச் சுடலாமோ இல்லையோ? ஜப்பானியர் பலமாகத் தான் நம்மவர்களைத் தாக்குகிறார்களாம். ஆனால் நம்மவர்கள் இதற்கெல்லாம் பயப்பட்டவர்களா? சிங்கங்கள் மாதிரி எதையும் லக்ஷ்யம் செய்யாது போராடுகிறார்கள். இது வரை பல வெற்றிகளைச் சம்பாதித்து வந்திருக்கிறார்கள். விமானப் படை அவர்களுக்கு அளிக்கும் உதவி, கொஞ்ச நஞ்சமல்ல.

மாங்டா எனும் முக்யமான ஊரை நம்மவர்கள் ஜப்பானியரிடமிருந்து பிடித்தார்களா இல்லையா, அப்பொழுது முதல் முதலில் நமது விமானிகள் அந்தப் பிரதேசங்களைச் சுட்டுத் தள்ளிவிட்டார்கள். ஜப்பானியர் எல்லாம் ஈசல்கள்போல் விழுந்து விட்டார்கள். அடிபடாதவர்கள் தப்பி ஓடிவிட்டார்கள். மரங்களிலே இருக்கும் ஜப்பானியர்கள் மீது இயந்திர பீரங்கிப் பிரயோகம் செய்யவேண்டுமென்றால், எவ்வளவு தாழப் பறக்கவேண்டும்! நமது விமானிகளுக்கு இதெல்லாம் தண்ணீர் பட்டபாடு!

ஜப்பானியர் அரக்கான் போர்முனையிலே அவஸ்தைப் படத் தான் செய்கிறார்கள். ஆனாலும் அவர்கள் சும்மா இருந்துவிடவில்லை. போன நாலாந் தேதி, நரிபோல தந்திரமாக நமது ரோந்துப் படைகளின் திருஷ்டிக்குத் தப்பி முன்னேறி வந்து டாங்பஜார் என்ற இடத்தைப் பிடித்துக் கொண்டு விட்டார்களாம். அப்புறம் கடும் போர் நடந்ததாம். பல ஜப்பானியர் பலியானார்களாம். அந்த டாங்பஜாரிலிருந்து தென் மேற்குப் பக்கமாக முன்னேற ஜப்பானியர் முயன்றார்களாம். அது பலனற்றுப் போய் விட்டதாம்.

**சென்னை வீரர்கள்!**

இப்படியே மெதுவாகவே பர்மாவில் போர் நடந்து கொண்டிருக்கிறது. சீனர் வேறொரு பக்கம் பர்மாவிற்குள் தைரியத்தோடு நூறு மைல்கள் வரை சென்றுவிட்டார்களாம். இந்தியாவில உள்ள நேசதேசப் படைகளில் அமெரிக்க, பிரிட்டிஷ், இந்திய சீனர்களிருக்கிறார்கள். அவர்களிடை உள்ள ஒற்றுமையையும், அவர்கள் தமாஷாக நேரத்தைக் கழிப்பதையும் பார்த்தால் ஆச்சரியமாகத் தானே இருக்கும்! இந்தப் படைகளிலே, சென்னை வீரர்களுக்கு ரொம்ப நல்ல பெயராம். ரோடுகள் போடுவதிலும், பாலங்களை அமைப்பதிலும், இடிந்த பாலங்களை மளமளவென ரிப்பேர் செய்வதிலும், எல்லோருக்கும் ருசியாகப் பணியாரங்கள் தயாரித்துக் கொடுப்பதிலும் இவர்களுக்கு ஈடு யாருமே கிடையாதாம்.

அஸ்ஸாம் பர்மிய எல்லையிலே, இருபத்து மூன்று வயசு கூட ஆகாத ஒரு மதராஸி சுபேதாராம். இவரது மேற்பார்வையில், போர்முனையில், ஒரு ரொட்டிக் கிடங்கு நடக்கிறதாம். இதிலே கேக்குகள், பிஸ்கோத்துகள், ரொட்டிகள் எல்லாம் தயாரிக்கப்படுகின்றனவாம். பெரிய இங்கிலீஷ் கம்பெனிகளில் தயாரிக்கப்படும் ரொட்டி, கேக் வகையராக்கள் கூட இதற்கு பக்கத்திலேயும் நிற்க முடியாதாம். ஒரு நாள் இந்தக் கிடங்கைச் சுற்றி விரோதியின் வெடிகுண்டுகள் விழுந்து வெடித்தனவாம். ஆனாலும் ரொட்டி சுடும் வேலை நிற்கவே இல்லையாம். வெடிகுண்டுகளால் ஏற்பட்ட சேதத்தைச் சரிப்படுத்திவிட்டு வந்த வீரர்கள், சுடச்சுட ரொட்டி சாப்பிட்டு மகிழ்ந்தார்களாம்.

**உதைக்கத் தான் போகிறோம்!**

பர்மா எல்லைப் போர் மெதுவாகவே நடக்கலாம். அங்கே படுவியாதிகள் பல உபத்திரவப் படுத்தலாம். ஆனாலும் ஜப்பானியரை சும்மா விட்டுவிடப் போகிறார்களா என்ன, நம்மவர்கள்? பிப்ரவரி மாதம் பிறந்தது முதலே 'பஸ்ட் கிளாஸ்' செய்திகள் வந்துகொண்டிருக்கின்றனவே! பிப்ரவரி முதல் தேதி அமெரிக்கப் படைகள் மார்ஷல் தீவுகளில் போய் இறங்கிவிட்டன. ஜப்பானியர் இதை எதிர்பார்க்கவே இல்லை.

இந்த மார்ஷல் தீவுகள் 25 வருட காலமாக ஜப்பானியர் வசமிருந்து வந்திருக்கின்றன. இந்த யுத்தத்திற்கு முன்பாகவே, ஜப்பானியர் வசமிருந்த தீவுகளிவை. இவை

மத்ய பஸிபிக் பிரதேசத்தி லிருக்கின்றன. இவற்றிலிருந்து 750 மைல் தூரத்திற்குள்ளாகவே, ஜப்பானியரின் கப்பற்படை ஒன்று தங்கி யிருக்கின்றது. இனிமேல் அந்தப் படை நிம்மதியாக இருப்பதற்கில்லை. அமெரிக்க விமானிகள் இனி சும்மா இருக்கப் போகிறார்களா என்ன? புதிதாகப் பிடித்த மார்ஷல் தீவுகளில் உள்ள விமான நிலையங்களைப் பலப்படுத்திக் கொண்டு, டிரக் துறைமுகத்தை நொறுக்க ஆரம்பித்து விடுவார்கள்.

**ஜப்பானின் பலம்**

வரவர ஜப்பானின் பலம் வானத்திலும், கடலிலும் க்ஷீணித்துக் கொண்டே வருகிறது. ஆரம்பத்திலே தட்டிக் கேட்பாரில்லாத பொழுது உத்சாகத்தோடு அகலக் கால் வைத்ததன் பலனை ஜப்பான் இப்பொழுது தான் அநுபவிக்க ஆரம்பித்திருக்கிறது.

ஜப்பானுக்குச் சொந்தமான பிரதேசத்தையே தாக்கக் கூடிய சக்தியை அமெரிக்கர்கள் பெற்று விட்டார்கள். இதோடு அமெரிக்காவின் உற்பத்தி சக்தி நின்றுவிடப் போவதில்லை. அது மளமளவென உயர்ந்து கொண்டேயிருக்கிறது. கேட்போர் பிரமிக்கத் தக்க வகையில், பல லக்ஷம் கோடி ரூபாய்கள் அமெரிக்க அரசாங்கத்தாரால் செலவிடப்பட்டு வருகின்றன. அரைகுறை மனசோடு அவர்கள் எதும் செய்யவில்லை. தம் எதிரியை உண்டு இல்லை என்று செய்துவிட வேண்டுமெனவே, அவர்கள் ஏற்பாடுகள் செய்து வருகிறார்கள். அவர்கள் போடும் திட்டங்கள் பிரமாண்டமானவையாகவே, இருக்கின்றன. ஆனாலும் அவை அதிரகசியமாக இருக்கின்றன். அந்தத் திட்டங்களை அமெரிக்கர் அமுல் படுத்த ஆரம்பித்த பின் தான், அவற்றின் தன்மை வெளியாகின்றது. ஒவ்வொரு முயற்சியிலும் அவர்கள் இதுவரை வெற்றியே பெற்று வந்திருக்கிறார்கள்.

இந்த வெற்றி ஏற்பட வேண்டுமென்று தானே அவர்கள் எடுத்த எடுப்பிலேயே, அமெரிக்காவில் உள்ள ஐந்தாம் காலப் பேர்வழிகளை யெல்லாம் மடக்கி உள்ளே தள்ளினார்கள். இனி அமெரிக்கர்களும் சரி, இதர நேச தேசத்தாரும் சரி, பூரண வெற்றி ஏற்படும்வரை நிற்கப் போவதே யில்லை.

**போனவாரம் நடந்த சம்பவம்**

அமெரிக்கர், ஜப்பானை அடக்க ரொம்ப சிரமப்பட வேண்டியிருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை. ஆனாலும் அவர்கள் மலைக்க வில்லை. போனவாரம் பார்த்தீர்களா, அமெரிக்கக் கப்பற்படை ஒன்று தைரியமாக, ஜப்பானுக்கு அருகே சென்று, ஜப்பானியத் தீவுகளில் ஒன்றில் உள்ள துறைமுக மொன்றை பீரங்கிகளால் சுட்டுத் தகர்க்க முயன்றிருக்கிறது.

வடக்கே அலூஷியன் தீவுகளிலே உள்ள அமெரிக்கர்களின் வேலையாகத் தானிருக்க வேண்டும் இது, அந்தத் தீவைப் பிடித்தபோதே, அடுத்தாற்போல் அவர்கள் ஜப்பான் செல்லும் பாதையில் முன்னேற முயலுவார்கள் என்பதை எல்லோரும் எதிர் பார்த்திருப்பார்களே! கூடிய சீக்கிரமே ஜப்பானிய நகரங்கள், விமானப் படையெடுப்பு என்றால் என்ன என்பதைப் பார்க்கப் போகிறார்கள். அப்பொழுது தான், டோஜோ கோஷ்டியார் சென்ற இரண்டு வருடங்களாகச் செய்துவரும் காரியங்கள் அசட்டுத் தனமானவை; அவற்றின் பலனாகத் தான், எத்தனையோ வருடங்களாக நிம்மதியாக இருந்த ஜப்பானிய நகரங்கள் இப்படிப் பாழாக நேர்ந்திருக்கிறது என்பதை ஜப்பானியப் பொது மக்கள் உணருவார்கள். நவீனச் சண்டை என்றால் எவ்வளவு கோரமானது என்டதை அவர்கள் அப்பொழுது தான் அறிவார்கள். இனி அவர்கள் வேண்டா மென்றாலும், தப்பமுடியாது. தானாக வலுச் சண்டைக்குக் கிளம்பிய ஜெர்மனியும், இத்தலியும் படுகிற அவஸ்தைகளை ஜப்பானும் பட்டுத் தானே ஆக வேண்டும்!

**ஜப்பானியரின் பேய்க் குணம்**

நாளை வரப் போவது இன்னது என்பதை மறந்து, இன்று திமிர் பிடித்த ஜப்பானிய ராணுவத் தலைவர்களும், அவர்களைச் சேர்ந்தவர்களும் அட்டூழியங்கள் பல செய்து வருகிறார்கள். பேய்கள் போலவும், ராக்ஷஸர்கள் போலவும் தங்களிடம் சிக்குவோரை ஹிம்சித்துக் கொல்லுகிறார்கள். இவ்வாறு செய்வோரின் பெயர்கள் எல்லாம் ஒரு தனி ஜாபிதாவில் இடம் பெறப் போகின்றன என்பதிலும், அத்தனை பேர்களும் கடுமையான தண்டனையை அடைந்தே தீரவேண்டும் என்பதிலும், சந்தேகமே வேண்டாம்.

முன்பு ஜப்பானியர் கண்மூடித் தனமாக கல்கத்தாவிலே ராணுவ இலக்கற்ற இடங்கள்மீது குண்டுகளை வீசினார்கள். ஏழைக் கூலிகள் மரணமடைந்தார்கள். சில ஜப்பானிய விமானங்களும் வீழ்த்தப்பட்டன. அவ்வாறு விழுந்த விமானங்களி லிருந்து தப்பிய விமானிகளை நம்மவர்கள் சித்திரவதையா செய்தார்கள்? ஆனால், ஜப்பானிய நகரங்கள் சிலவற்றின் மீது போன வருஷம் குண்டு வீசிய அமெரிக்க விமானிகளை, ஜப்பானிய அதிகாரிகள் படாத பாடு படுத்தி, தூக்கில் போட்டார்களாம்.

அவர்கள் சென்ற இடங்களில் எல்லாம், செய்யத் தகாத காரியங்களையே செய்து வருகிறார்களாம். பிரிட்டிஷ் முகாமுக்குத் தப்பி வந்துள்ள அகதிகள் சொல்லும் விவரங்களைப் பார்த்தால், எவர் மனமும் திடுக்கிடும்.

**காம வெறிபிடித்த காலிகள்**

கட்டற்ற காமவெறி கொண்டு காலிகள் போல் கன்னியரையும், மற்றப் பெண்களையும் கற்பழிக்கிறார்களாம் ஜப்பானிய சோல்ஜர்கள். மேல் சிண்ட்வின் நகரிலே மூன்று பர்மியப் பெண்களை அவர்கள் பலவந்தமாகக் கெடுத்துக் கொன்று விட்டார்களாம். இன்னொரு ஊர் அருகே, வயல்களிலே ஒரு குடியானவன் வேலை செய்து கொண்டிருந்தானாம். அவனுக்கு அவனது மனைவியும், மகளும் உணவு கொடுத்துக் கொண்டிருந்தார்களாம். அவர்களை ஜப்பானிய சோல்ஜர்கள் சிலர் பார்த்துவிட்டார்களாம். உடனே தாயையும் மகளையும் அவர்கள் கற்பழிக்கத் தொடங்கி விட்டார்களாம். அவர்களைத் தடுக்க வந்த குடியானவனைச் சுட்டுத் தள்ளினார்களாம். குற்றுயிராய்க் கிடந்த அவன் கண்ணெதிரிலேயே மிருகங்கள் போல அவர்கள் தாயையும் பெண்ணையும் கெடுத்து மூர்ச்சையடையும்படி செய்து சென்றார்களாம்.

சென்ற இரண்டு வருடங்களாக அவர்கள் செய்யும் 'தர்ம' காரியங்கள் பல, மெள்ள மெள்ள சீனத் தலைநகருக்கும், இதர நாட்டினரது செவிகளுக்கும் எட்டி வருகின்றன.

பிரிட்டிஷ், அமெரிக்கப் பிரஜைகளை அவர்கள் வெகு கேவலமாக நடத்துகிறார்களாம். இதை யெல்லாம் பகிரங்கப்படுத்தாது, ஜப்பானுக்குத் தம் ஆக்ஷேபனையைத் தெரிவித்து, நிலைமையைச் சீர்திருத்தலாம் என்று நேச தேசத்தார் முயன்று பார்த்தார்கள். அவர்களது முயற்சிகள், எதும் பலன் தரவில்லை.

நேசதேசக் கைதிகள் இருக்கும் முகாம்களைப் போய்ப் பார்க்கக் கூட, சர்வதேச நியாய விதிப்படி செஞ்சிலுவைச் சங்கத்தாருக்கு, ஜப்பானியர் வசதிகள் செய்து கொடுக்க மறுத்து விட்டார்கள்.

நேசதேசக் கைதிகளுக்கு அனுப்பப்படும் உணவுப் பார்ஸல்களும் ஒழுங்காகப் போய்ச் சேருகின்றனவா என்பது தெரியவில்லை. ஆனால், அக்கைதிகளின தேக நிலை ரொம்பக் கெட்டுக் கிடக்கிறது. அக்ரமமாக பலரை மோசமான வேலைகளைச் செய்யச் சொல்லுகிறார்கள் என்பது தெரிய வருகிறது. கைதிகளை இவ்வாறு நடத்துவதில் ஜப்பானியருக்கு வெகு உத்சாகமாம். வெளி நாட்டாரை மாடுகள் போல ஒரே கயிறால் கட்டி, தெரு வழியே ஊர்கோலம் போக விடுகிறார்களாம்.

ஹாங்காங் நகரில் ஒரு ஆஸ்பத்திரி. அங்கே நர்ஸுகளாக வேலை பார்க்கும் பல இளம் சீனப் பெண்களை ஜப்பானியர், ராணுவ விபசார விடுதிகளுக்குத் தூக்கிப் போக வந்தார்களாம். அவர்களை விட்டு விடுவதானால் தாங்கள் அவர்களுக்குப் பதிலாக வரத் தயார் என்று கூறினார்களாம் பல பிரிட்டிஷ் நர்ஸ்கள்.

ஹாங்காங்கைப் பிடித்ததும் வண்டி வண்டியாக அந்நிய நாட்டு மாதரை ஜப்பானியர் எங்கோ ஏற்றிச் சென்றார்கள். இன்று வரை அவர்களின் கதி என்ன ஆயிற்று என்று யாருக்கும் தெரியாது.

ஜப்பானியர் சிங்கப்பூரில் பிரவேசித்தபோது, ஆஸ்பத்திரிகளில், காயம்பட்டுக் கிடந்த பிரிட்டிஷ் சோல்ஜர்களையும், அதிகாரிகளையும் அவர்கள் சனியன்களால் குத்திக் கொன்றிருக்கிறார்கள்.

இதை யெல்லாம் யார் தான் பொறுப்பார்கள்? இவற்றிற் கெல்லாம் ஜப்பானிய அதிகாரிகள் ஒரு நாள் சரியான படி பதில் சொல்லியே ஆகவேண்டும்.

**ராக்ஷஸ தர்பார்**

ராக்ஷஸ தர்பார் எவ்வளவு தடபுடலாக நடந்து கொண்டிருந்தாலும், அதற்கும் ஒரு முடிவு வந்தே தீரும். ராவணன் இருந்தான், அட்டகாசம் செய்தான் அண்டத்தையே அலறச் செய்து கொண்டிருந்தான். அவனுக்கும் ஒரு முடிவு இருந்த தல்லவா? அதே போல, உலக சமாதானத்தைக் குலைத்த இந்த உருப்படா அச்சு நாட்டவருக்கும் ஒரு முடிவு ஏற்படத்தான் போகிறது. அது சீக்கிரமே ஏற்பட்டு, நேசதேசத்தாரின் கொடி எங்கும் பறந்து, எல்லா இடங்களிலும் சமாதான சூரியன் பிரகாசித்து, சகலரது முகங்களிலும் நிம்மதியும் ஆனந்தமும் தோன்ற வேண்டு மென்பதே நமது அவா.

# வீட்டுத் தோட்டம்

ஸி. ஸரஸ்வதி அம்மாள்
(சொற்பொழிவாளர், தேசியப் போர் முனை, சென்னை.)

சுப்பன் ஒரு இந்திய வீரன். அவன் பட்டாளத்தில் சேர்ந்து இரண்டு வருடங்களுக்கு மேலாய் விட்டன. இப்பொழுது அவ்வீரன் பர்மாவில் உள்ள காடுகளில் நம் கொடிய எதிரியாகிய ஜப்பானியரோடு போராடிக் கொண்டிருக்கிறான். மலைகளிலும், காடுகளிலும், இரவிலும் பகலிலும் அச்சமின்றி, தன் தாய் நாட்டைக் காப்பாற்றுவதற்காக, மழையிலும் வெயிலிலும் குளிரிலும் பனியிலும் போராடுகிறான். அவனுக்கு நான்கு பிள்ளைகளும் மனைவியும் இருக்கிறார்கள். சுப்பன் தன் சம்பளத்தை வீண் செலவு செய்யாமல், பட்டணத்திலிருக்கும் தன்னருமை மனைவி வள்ளிக்கு, மாதந்தோறும் அனுப்பி வந்தான். வள்ளி நல்லவள். கல்வியறிவு இல்லாதவளாயினும் மிக்க புத்திசாலி. குடித்தனப் பாங்குள்ளவள். கணவனின் கஷ்ட நஷ்டத்தை நன்கறிந்தவள்.

இவள் வசிக்கும் வீடு கூவம் நதியை அடுத்துள்ள ஒரு சிறு குடில். வ்ள்ளி சுறு சுறுப்புள்ளவள். உழைப்பாளி. எனவே அவள் தன் குடிலையும், அதைச் சுற்றியுள்ள சிறு தோட்டத்தையும் சுத்தமாக வைத்திருந்தாள். ஒரு நாள் காலையில் சுப்பனிடமிருந்து வள்ளிக்கு வழக்கம் போல் பணம் வந்தது. அவள் அதைப் பெற்றுக் கொண்டு கடைக்கு காய் கறி வாங்கப் புறப்பட்டாள். ஆனால் அவள் வீட்டுக்குத் திரும்பும் போது, வெறுங் கூடையோடு தான் வந்தாள். என் தெரியுமா? கடையில் காய்கறிகள் யானை விலை குதிரை விலையாக விற்பதைக் கண்டாள். திடுக்கிட்டாள். ஐயோ என் கணவர் உயிரையும் வெறுத்து, போர் முனையில் இரத்தத்தைச் சிந்தி சம்பாதிக்கும் காசை இப்படி அனாவசியமாக செலவு செய்யலாமா? கடையிலிருக்கும் காய் கறிகளோ கொஞ்சம். வாங்க வந்திருக்கும் கூட்டமோ அதிகம். இந்தக் கூட்டத்திலகப்பட்டுத் திண்டாட யாரால் முடியும்? என்ற எண்ணம் மின்னல் போல் வள்ளியின் மனதில் தோன்றி மறைந்தது. மறு நிமிடம் கூட்டத்தி லகப்பட்டு நசுக்குண்டு குப்பம்மாள் திடீரெனக் கூட்டத்தால் நெருக்கித் தள்ளப்பட்டு, தடால் என்று வள்ளி மீது சாய்ந்தாள். பார்த்தாள் வள்ளி. இனியும் காய்கறி கடையில் நிற்பது தவறு என்றுணர்ந்தாள். உடனே தன் மேல் விழுந்த குப்பம்மாளைப் பிடித்து நிறுத்தி, “அடியம்மா நீயா? நல்லாருக்கு நீ காய்கறி வாங்கினது; போரும் வா, வூட்டுக்குப் போவோம்” என்றாள். குப்பம்மாள். ஐயோ வள்ளியக்கா பாத்தியா! இந்தக் கொடுமையை இம்புட்டு நேரமா காத்துக்கின்னு இருந்தும் ஒரு கறிகாய் கூட வாங்க முடியலியே. வூட்டுக்குப் போயி என்ன பண்ணுவேன் என்று கண்ணீர் விட்டாள். வள்ளி அவள் கையைப் பிடித்து “பயப்படாதே வா போவோம். சோம்பேறிங்க தான் கவலைப் படுவாங்க. அவுங்களுக்குத் தான் வேலை செய்ய முடியாது. மத்தவங்க கஷ்டப்பட்டு பயிர் செய்த காய் கறிங்கள் வாங்கிச் சாப்பிடணுமின்னு அவங்களுக்குத்தான் தலேலேழுத்து. நமக்கென்ன? நாம்ப உழைப்பாளிங்க. ஏழைங்க அதிகமா விலை கொடுத்து வாங்கவும் முடியாது. என்? நாம்ப நம்ப வூட்டுலே காய் கறிகளே எல்லாம் பயிர் செஞ்சா போவுது. இப்படிக் கஷ்டப்படவும் வேணும். பணத்தே வீண் செலவு செய்யவும் வேணும். சிக்கனமா யிருக்கலாம். கையிலே நாலு காசு இருந்தா நல்லதுதானே. நாளைக்கு சண்டே முடிஞ்சுதின்னு, மிச்சமாக்கின பணத்தே நல்ல வழியிலே செலவு செய்யலாம். அது மட்டுமா? இந்த வாடல் காய் கறிகளைத் திங்கறதே விட, பச்சைப் பசேலின்னு நல்ல புதுசான காய் கறிகளே சமைச்சு திண்ணலாம். நமக்குப் போக மீந்துதுன்னு பயிர் செய்ய முடியாதவுங்களுக்கு வித்துட்டு அந்தப் பணத்தையும் மிச்சப்படுத்தலாம். நம்வூட்டு தோட்டமும் பாக்க அழகா செடி கொடி பூத்துக் காச்சு இருந்தா, எத்தனை நல்லாருக்கும்? நமக்கும் நல்ல வேலை. வீண் பொழுது போக்கிக்கின்னு அண்டே அசல்லே சண்டே போட்டு மண்டே உடையாமே இருக்கலாம். நல்ல வேலை செய்யறதுனாலே நமக்கு உடம்புக்கும் நல்ல பலம் உண்டாகும். இதெல்லாம் தெரியாமே நீயும் நானுமா இப்படித் திண்டாடிக்கினு தெருவிலே நிக்கறது; எனக்குப் பிடிக்கவே யில்லெ போ,” என்றாள். அதைக் கேட்ட குப்பம்மாள், “நீ சொன்னது சரி தான். இந்தக் காய் கறிகளுக்குமா சண்டெ வந்தது? என் தான் இப்படி விலை எறிக்கின்னு போவுதோ அம்மா” என்று அங்கலாய்த்தாள்.

**அயல் நாட்டு சிப்பாய்களுக்குக் காய்கறி**

வள்ளி இவளைப் பார்த்து “குப்பு உனக்கு ஒண்ணுமே தெரிலியே. இது சண்டைக்கால மில்லியா? நம்ப தேசத்தே காப்பாத்த வெளி தேசங்ளிலேருந்து ஆயிரமாயிரமா சிப்பாய்ங்க வந்து இருக்காங்களே; அவுங்களுக் கெல்லாம் காய் கறிங்க வேணுமா? பட்டிக் காடுங்கள்ளே இருந்து கூட நம்ப பட்டணத்துக்கு, யுத்த சம்பந்தமான தொழில் சாலைங்கோ இருக்கே, அங்கே வேலை பாக்கறத்துக்கு லக்ஷக் கணக்கானவங்க வந்து இருக்காங்களே; அவங்களுக்கு எல்லாம் காய் கறி ஆகுமில்லே? சண்டைக்கு மின்னே பட்டணத்திலே யிருந்த ஜனங்களை விட இப்போ ஆயிரக் கணக்கானவங்க அதிகமானவங்க இருந்தா, எல்லாத்துக்கும் கஷ்டம்தானே. உள்ள காய் கறிகளே, எல்லாருந் தான் வாங்க பாப்பாங்க. அதனாலே தான் இந்தக் கஷ்டம்” என்று சொன்னாள். குப்பம்மாள் முணு முணுத்தாள்.

**போக்கு வரவு வசதிகள்**

“ஆமாம் வெளியூரிலிருந்து காய்கறி கொண்டு வரப்படாதோ” என்றாள். வள்ளி அவளிடம், “ஆம்’ ஆனால் போக்கு வரவு சாதனங்கள்ளாம் நம்ப நாட்டுப் பாதுகாப்புக்கு வேண்டி மிலிடரிக்காக உபயோகப்படுத்துறாங்க. அதனாலே வெளியூரிலிருந்து வேண்டிய சாமான் வர முடியலே. அதுமில்லாதே அங்கங்கே காய்கறிங்க அங்கங்கே சரியாப் போவுது. பட்டணத்துலே இருக்கும் நாம்ப வருது வருதுன்னு வாயே திறந்துதுன்னு இருந்தா, பட்டினி தான கடக்கணும். வா போகலாம்” என்று சொல்லி அவளையும் அழைத்துக்கொண்டு வந்து விட்டாள். ஆனால் வள்ளியின் இடைவிடாத உழைப்பினால் அவள் தோட்டம் இன்று பச்சைப் பசேலென்று இருக்கிறது. எங்கும் புஷ்பமும் காயுமாகப் பூத்துக் குலுங்குகிறது. சுரைக் கொடிகள் வீட்டுக் கூரையில் படர்ந்து அழகிய செடி வீடாக அவள் குடிசை பார்ப்பவர் கண்களைப் பறிக்கிறது. குப்பை மேட்டில் பூசனிக்கொடி பூத்து விளங்குகிறது. வள்ளி, தோட்டத்தில், ஒழிந்த நேரங்களில் வேலை செய்கிறாள். தன் மக்களையும் பள்ளிக்கூட மில்லாத வேளைகளில் தோட்டத்தில் வேலை செய்யும்படி கட்டளை இடுகிறாள். மக்களும் தானும் வயிறு நிரம்ப உண்கிறார்கள். ஏராளமான காய் கறிகளை அவள் கடையில் கொண்டு போய் விற்று, தனக்கு வேண்டிய வேறு சாமான்களை வாங்கிக் கொள்கிறாள். மீந்த காசை உண்டியில் சேர்த்து விடுகிறாள். கணவன் அனுப்பும் பணத்தை அப்படியே சேமித்து விடுகிறாள். இது தான் வள்ளியின் கதை.

**நமது கடமை**

இதைப் போலவே நாமும் செய்தால், எவ்வளவு நன்றாக இருக்கும்? எத்தனை நன்மை உண்டாகும்? எத்தனை நெருக்கடி நீங்கும் என்பதனை நாம் ஒவ்வொருவரும் ஆழ்ந்து பார்க்க வேண்டியது நம் கடமையாகும். எனவே நம் வீட்டுத் தோட்டங்களை பாழ் நிலமாகப் போடாமல் பயிரிட வேண்டும். ஆகவே வீட்டுத் தோட்டத்தைப் பற்றிச் சில குறிப்புகளைக் கவனிப்போம். சாதாரணத் தோட்டங்களில், வாழை, முருங்கை, கத்தரி, வெண்டை, மிளகாய், கொத்தவரக்காய் முதலிய செடிகளையும் அவரை, புடலை பாகல், பூசணி, முதலிய கொடிகளையும், கீரை கொத்தமல்லி, வெந்தயம், புதினா முதலியவற்றையும் பயிரிடலாம். சூரிய வெளிச்சமும், தண்ணீர் வசதியும் செடிகளுக்கு அவசியமானதால் அந்த வசதிகளை முதலில் கவனிக்க வேண்டும். பின் நிலத்தை நன்றாகக் கொத்தி, கட்டிகளை உடைத்து, புல் பூண்டுகளை அகற்றி நிலத்தை மிருதுவாக்கி நல்ல எருக்களான, இலை தழைகள் மக்க வைத்த எரு, ஆடு மாடுகளின் கழிவுப் பொருள்களான சாணங்கள் முதலியவற்றை, மண்ணுடன் கலக்க வேண்டும். களிமண்ணும் மணலும் சேர்ந்த நிலமே, பயிரிட ஏற்ற நிலமாகையால் அவ்விரண்டும் பயிரிடும் நிலத்தில் சரியான அளவுடன் இருக்கும்படி கவனித்துக் கொள்ள வேண்டும். நல்ல புதிய விதைகளை தேர்ந்தெடுத்து அவ்வவ்வற்றிற்குரிய காலங்களில் விதைக்க வேண்டும். என் என்றால் காலமல்லாக் காலத்தில் விதைக்கும் விதைகள், நல்ல பயன் தரமாட்டா. எனவே ‘பருவத்தே பயிர் செய்’ என்ற ஔவை வாக்குப்படி அதனதன் பருவத்தில் பயிரிட்டால், நல்ல பலனைத் தரும். பாகல், புடல், அவரை போன்ற விதைகளை தனித் தனியே குழியொன்றுக்கு ஒன்று அல்லது இரண்டு வீதம் மண்ணில் ஓரங்குல ஆழத்தில் பதிக்க வேண்டும். கீரை கத்தரி போன்ற சிறு விதைகளை மண்ணுடன் கலந்து தூவ வேண்டும். விதைத்த நாள் முதல், முளை தோன்றும் நாள், வரை, மண்ணில் ஈரமிருக்க வேண்டும். களைகள் வளராமல் கவனித்துக்

(11-ம் பக்கம் பார்க்க.)

# இந்தியக் கப்பற் படை

## சிக்னல் மென்னும் தந்தி வேலைக்காரர்களும் தேவை

கூடிய சீக்கிரத்தில் இந்தியக் கப்பற் படையைச் சேர்ந்த சிக்னல் பள்ளிக்கூட உத்தியோகஸ்தர் ஒருவர் தென்னிந்தியாவில் சுற்றுப் பிரயாணம் செய்வார். அப்போது, இப் படையில் சேரும் எண்ணமுள்ளவர்களுக்கும் இளைஞர்களுக்கும், இந்தப் படையில் சேருவதனல் முன்னுக்கு வர எவ்வளவு சந்தர்ப்பங்களுண்டு என்பதை விளக்குவார்.

இந்தியக் "கப்பற்" படையின் போக்கு வரவுப் பகுதி தான், அதன் உயிர் போன்றது. ஏனென்றல், இதுதான் சிக்னல் மென்களையும் தந்தி வேலைக்காரர்களையும் கப்பற் படைக்கு உதவுகிறது. "மோர்ஸ்", "செமபோர்", கம்பி யில்லாத் தந்தி முதலியவற்றின் மூலம் இந்தியப் போர்க் கப்பல்களிலிருந்து வெளியேயும், வெளியே யிருந்து இந்தியப் போர்க் கப்பல்களுக்கும் தகவல்கள் கொடுத்து வாங்குகிருர்கள். நாட்டின் பாதுகாப்பில் பங்கெடுத்துக் கொள்வதற்கு மிகச் சிறந்த சந்தர்ப்பத்தை இது அவர்களுக்கு அளிக்கிறது. வேலையும் விரும்பத் தக்கது. நல்ல சம்பளமும் கிடைக்கிறது. மிகச் சிறந்த முறையில் உத்தியோக உயர்வுங் கிடைக்கும். இதிலிருந்து ஒருவர் மீண்டு, சிவில் வாழ்க்கையை மேற்கொள்ளுவாரானல், இவர் இங்கே அடைந்த தொழிலனுபவம் பெரிதும் அவருக்கு உதவியா யிருக்கும்.

லெப்டினெனட் ஆர். எச். ரட்டர்போர்ட், ஆர்.ஐ.என். வி.ஆர்., கீழ்க்கண்டபடி சுற்றுப் பிரயாணம் செய்வார் :—

| | | | |
|---|---|---|---|
| பெங்களூர் | .. | பிப்ரவரிமீ | 8உ. |
| கோயமுத்தூர் | .. | ஷ | 10, 11உ. |
| மங்களூர் | .. | ஷ | 13, 14உ. |
| கண்ணனூர் | .. | ஷ | 15, 16உ. |
| தலைச்சேரி | .. | ஷ | 17, 18உ. |
| கள்ளிக்கோட்டை | .. | ஷ | 20, 21உ. |
| எர்ணுகுளம் | .. | ஷ | 23, 24உ. |
| கோட்டையம் | .. | ஷ | 25, 26, 27உ. |
| கொல்லம் | .. | ஷ | 28, 29உ. |
| திருநெல்வேலி | .. | மார்ச்சுமீ | 2, 3உ. |
| மதுரை | .. | ஷ | 5உ. |
| தஞ்சாவூர் | .. | ஷ | 7, 8, 9உ. |
| சென்னை | .. | ஷ | 10உ க்கு மேல் சில நாட்கள். |

இந்த ஊர்களில் இவர் அந்தந்த ஜில்லா ரெக்ரூடிங் ஆபீசுகளில் தான், தானும் ஆபீசு நடத்துவார். ஆனல், தலைச்சேரியில் 'டிராவெலர்ஸ் பங்களாவிலும்,' தஞ்சாவூரில் ரெயில்வே ரிடையரிங் ரூமிலும் தங்குவார்.

கப்பற் படையின் போக்கு வரவுப் பகுதியில் சேர விரும்புகிறவர்கள், நல்ல ஆங்கில அறிவு பெற்றிருக்க வேண்டும்; குறைந்தது 10-வது வகுப்பு வரையிலுமாவது படித்திருக்கவேண்டும். $17\frac{1}{2}$-க்கு மேல் 24 வயதிற்குட்பட்டவரா யிருக்க வேண்டும்.

---

ஆரவல்லியே நீயும் விணாய்—என்ற மெட்டு

தேடும் பொருளை யெல்லாம் வீணாய்ச் செலவு செய்யலாமா
சிறு சிறு தொகையாக மீத்தே சேமித்தல் தவருமா (தேடும்)

சிக்கனம் பண்ணுவோம் செலவை குறைத்துமே
தேவையில்லா தன தவிர்ப்போம்—நாம் (தேவை)

தினமொரு பணமென
சேமிப்புப் பத்திரங்கள் வாங்கிச் சேமிக்க முயல்வோமே (தேடும்)

தேசப் பொருள் நிலை சீர்ப்பட எண்ணியே
சேமிப்புத் திட்டம் வகுத்தார் சர்க்கார்
பின் வரும் நாட்களில் (சேமி)

உன்னதமாக நாம் வாழ உகந்த வழியாமே
ஊதிய முண்டதிஞல் நாமும் உயர்வு பெறுவோமே (தேடும்)

---

(10-ம் பக்கம் தொடர்ச்சி.)

கொள்ள வேண்டும். இனிமேல் பருவ காலங்களை கவனிப்போம். சித்திரை வைகாசி மாதங்கள் வெயில் அதிகம். மழையும் பெய்யும் பூமியை உழமுடியும். ஆனி மாதம் மழை பெய்யும். ஆடியில் காற்று வீசும். விதை விதைக்க இது ஏற்ற காலம். ஆவணியில் காற்றும் மழையும் கொஞ்சம் ஆதலால், நாற்றுகளைப் பிடுங்கி நடலாம். புரட்டாசி கடைசியில் மழை ஆரம்பமாகும். இக்காலத்தில் கிழங்கு வகை செடிகளை நடுதல் வேண்டும். ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் மழை அதிகம். இப்பொழுது காய்களையும் விதைகளையும் சேகரித்துக் கொள்ள வேண்டும். செடிகளை அழிக்கப் பல பூச்சிகள் கிளம்பும்; அவற்றை அழிக்க வேண்டும். மார்கழி, தை, பனிக்காலம். இம்மாதங்களில் நிலத்தைக் கொத்தவும், களை எடுக்கவும் வேண்டும். மாசி, பங்குனி, பனியில்லாமல் வெயில் காய ஆரம்பிக்கும். காய்கள் காய்த்துவிடும், அவைகளைப் பறித்து விதைகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். இனி சில செடிகளைப் பற்றிச் சொல்லுகிறேன்.

**அவரையும், பட்டாணியும்:**—சம பூமியில் மே முதல் ஜூன் வரை, மழை நின்றவுடன் விதை ஊன்ற வேண்டும். மலை நாட்டில் ஏப்ரல் முதல் ஜூன் மாதம் வரை பூமியை சாண எருவும் இலைகளைப் பொசுக்கிய சாம்பலையும் கலந்து பண்படுத்தி, விதைகளை 3 அல்லது 4 அடிகளுக்கு ஒன்று வீதம் ஒரு அங்குல ஆழத்தில் ஊன்ற வேண்டும். நிலம் காய்ந்துவிடக் கூடாது. இதன் கொடிகளை பந்தலில் ஏற்றி விடவேண்டும். நட்ட நாலு மாதத்தில் பலன் பெறலாம்.

**புதினு:**—இந்தக் கொடியின் வேரைக்கொண்டு வந்து நன்ருக செய்நேர்த்தி செய்யப்பட்ட பூந்தொட்டிகளிலாவது பாத்திகளிலாவது நடவேண்டும். இந்தச் செடி எல்லாப் பருவத்திலும் நடலாம். சம பூமியில் நிழலில் வளர்க்க வேண்டும்.

எனவே ஒவ்வொருவரும் தத்தம் வீடுகளில் வீட்டுத் தோட்டங்களை வைப்பதால் தாங்களும் லாபமடைகிருர்கள். வெற்றியையும் சமீபத்துக்குக் கொண்டு வருகிருர்கள்.

[சென்னை அகில இந்திய வானெலி நிலையத்திலிருந்து பிப்ரவரிமீ 1உ ஒலிபரப்பப்பட்ட பிரசங்கம்.]

**வானெலிப் பிரசங்கம் : செஞ்சிலுவைச் சங்கம்.**

பிப்ரவரிமீ 15உ செவ்வாய்க்கிழமை மாலை 7-45 மணிக்கு செஞ்சிலுவைச் சங்கப் பிரசங்கம் சென்னை வானெலி நிலையத்திலிருந்து ஒலி பரப்பப்படும்.

# யுத்த நாட் குறிப்புக்கள்

## பிரிட்டனும், ஜெர்மனியும்.

**பிப்ரவரி 2.**—யுத்தக் குற்றவாளிகளை நடத்துவது போலவே ஜப்பானியர்களையும் மற்ற எதிரிகளையும் நடத்துவது தான் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கொள்கையென்றும், இதுபற்றி அமெரிக்க அரசாங்கத்தோடு கலந்து வருவதாகவும் காமன்ஸ் சபையில் மிஸ்டர் ஆன்டனி ஈடன் கூறினார்.

சர் ஆர்தர் டெட்டருக்கும், லெப்டினெனன்ட் ஜெனரல் கார்ல் ஸ்பாசுக்கும் மன்னர் பிரான் பேட்டி யளித்தார்.

யுத்தத்தைக் குறித்து ஜெனரல் மண்ட்காமரி ஒரு அறிக்கை விடுத்தார்.

சென்ற வருஷம் முடிய 52 மாதங்களில், 1,00,56.000 டன் எதிரிக் கப்பல்கள் மொத்தத்தில் கடலில் மூழ்கியோ சேதமடைந்தோ போயின வென்று கப்பற் படை இலாக்கா அறிக்கை கூறுகிறது.

**பிப்ரவரி 7.**—ஜெர்மன் தலை நகரத்தை, விமானத் தாக்குதல் காரணமாக, பெர்லினிலிருந்து வேறிடத்திற்கு மாற்றி யிருப்பதாகத் தெரிகிறது.

## அமெரிக்காவும், அட்லாண்டிக்கும்.

**பிப்ரவரி 3.**—கப்பற்படை கமிஷனின் தலைவரான ரியர் அட்மிரல் எமரி எஸ்லாண்ட் சென்ற ஜனவரி மாதத்தில் 208 கப்பல்கள் கட்டப்பட்டதாகவும் இந்த ஜனவரி மாதத்தில் 124 கப்பல்கள் தான் கட்டப்பட்டன வென்றும் அறிவித்தார்.

**பிப்ரவரி 4.**—48 மணி நேரத்தில் தெற்கு அட்லான்டிக் மகா சமுத்திரத்திலே 3 ஜெர்மன் கப்பல்களை அமெரிக்க யுத்தக் கப்பல்கள் மூழ்கடித்து விட்டதாக கப்பற் படையிலாக்கா அறிக்கை கூறுகிறது.

**பிப்ரவரி 5.**—ஒரு கப்பற் படையைச் சேர்ந்த வைத்திய சாலையில் தனக்கு ஒரு சிறிய சத்திர சிகிச்சை நடந்ததாக மிஸ்டர் ரூஸ்வெல்ட் பத்திரிகைப் பிரதிநிதிகளிடம் கூறினார்.

**பிப்ரவரி 7.**—தொழிலாளர்கள் தொல்லை காரணமாக பால் ஆற்று மாஸ்சுசெட் கார்ப்பொரேஷனைச் சேர்ந்த 7 இயந்திரசாலைகளைப் பொறுப் பேற்றுக் கொண்டு நடத்தும்படி, ரூஸ்வெல்ட் அமெரிக்க யுத்த மந்திரிக்கு கட்டளையிட்டிருக்கிறார்.

## இந்தியா, பர்மா, இலங்கை.

**பிப்ரவரி 3.**—ஹூயாங் பள்ளத்தாக்கிலுள்ள டெய்பாகா என்னுமிடத்தை சீனப் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

**பிப்ரவரி 4.**—உள் நாட்டுப் பாதுகாப்பு நிரந்தரக் கமிட்டி டில்லியில் சர் பெரோஸ் கான் நூன் தலைமையில் கூடியது.

இன்று அதிகாலையில் ஒரிசா கரையில் ஒரு எதிரி விமானம் வந்து சில வெடி குண்டுகளை எறிந்து விட்டுப் போனது. சேதம் எதுவும் நேர வில்லை.

இன்றிரவு விசாகப்பட்டினம் பகுதியில் ஒரு எதிரி விமானம் வந்து சில வெடி குண்டுகளை எறிந்தது. யாருக்கும் காயமோ உயிர்ச் சேதமோ நேரவில்லை. சொத்துக்களுக்கும் சேதமில்லை

**பிப்ரவரி 5.**—பிப்ரவரி மாதம் 3, 4 தேதிகளில் பர்மா எல்லைப் புரத்தில் நிகழ்ந்த போரைக் குறித்து ஒரு அறிக்கை வெளிவந்தது.

**பிப்ரவரி 7.**—எதிரி விமான மொன்று இலங்கைக் கரையை அணுகி ஒரு வெடி குண்டை வீசியது. சேதம் எதுவுமில்லை.

## ரஷ்யா.

**பிப்ரவரி 2.**—போலந்திலுள்ள காரின் ஆற்றை ரஷ்யப் படைகள் கடந்து விட்டன. நர்வா ஆற்றங் கரையை ரஷ்யப் படைகள் அடைந்து விட்டன. அதாவது, எஸ்டோனியாவுக்கு 6 மைல் தூரத்தில் ரஷ்யர்கள் இருக்கிறார்கள்.

**பிப்ரவரி 3.**—ஸ்மைலாவை ரஷ்யப் படைகள் கைப்பற்றிக் கொண்டன. போலந்தில் ரோப்னோவையும் லக்கையும் சோவியத் படைகள் கைப்பற்றிக் கொண்டன. எஸ்டோனியாவில் 6 பட்டணங்களை ரஷ்யப் படைகள் கைப்பற்றி விட்டன.

"இப்போதைக்கு நம் நிலைமை மிகவும் ஆபத்தாயிருக்கிறது" என்று பின்லாந்து தலைவர் பின்னிஷ் பார்லிமெண்டை ஆரம்பித்து வைக்கும் போது, கூறினார்.

**பிப்ரவரி 4.**—பின்லாந்து வளைகுடாவில், நார்வா ஆற்றின் முகத்துவாரம் வரையிலும், நொவகராட் லெனின்கிராட் ரயில்வேயிலிருந்தும் ஜெர்மானியர்கள் அடியோடு விரட்டப்பட்டு விட்டார்கள். எஸ்டோனியாவுக்கு மேலும் சோவியத் படைகள் முன்னேறுகின்றன.

**பிப்ரவரி 5.**—முதலாவது உக்ரேனியப் போர் முனையில், லக்டோவ்னு, ஸ்டநல்ப்யுரேப் ஆகிய இடங்களையும், எஸ்டோனியாவில் பல விடங்களையும் ரஷ்யப் படைகள் கைப்பற்றின.

**பிப்ரவரி 6.**—எஸ்டோனியாவையும் அபோஸ்டோலோவையும் ரஷ்யர்கள் கைப்பற்றிக் கொண்டார்கள்.

ரஷ்யாவுக்கும் பின்லாந்துக்கும் ஒரு தனி ஒப்பந்தம் பேசப்படுவதாக வந்த செய்தியை சோவியத் அரசாங்கம் மறுக்கிறது.

**பிப்ரவரி 7.**—ரஷ்யப் படைகள் நிகொபோலை வளைந்து கொண்டன.

**பிப்ரவரி 8.**—நிகோபோல் பிடிபட்டது.

## இத்தாலி, ஆப்பிரிக்கா, மத்தியதரைக் கடல்.

**பிப்ரவரி 1.**—ரோமாபுரிக்கு 16 மைல் தூரத்தில் 5-ம் படை யிருக்கிறது.

**பிப்ரவரி 3.**—காசினோவில் 5-ம் படை தெருச் சண்டை போடுகிறது.

அன்சியோவில் பீல்ட் மார்ஷல் கேசல்ரிங் எதிர்த்துத் தாக்கினார்.

**பிப்ரவரி 4.**—ரோமல் இத்தாலியிலிருப்பதாகக் கூறப்படுகிறது.

டோரிக்லாவை 8-ம் படை கைப்பற்றியது

காசினோ பிடிபடத் தக்க நிலைமையிலிருக்கிறது.

**பிப்ரவரி 7.**—பிஸ்ஸோ பெரோட்டா, மான்டினி ரொடோமோ என்னு மிரண்டு இடங்களை 8-ம் படை கைப்பற்றியது.

## நடு நிலைமை நாடுகள்.

**பிப்ரவரி 3.**—ஜெனரல் பிராங்கோ தலைமையில் ஸ்பெயின் மந்திரி சபை கூடி, தாம் நடு நிலைமை வகிக்க வேண்டு மென்பதாக முடிவு செய்திருக்கிறார்கள்.

**பிப்ரவரி 5.**—விஷி பிரான்சு, பல்கேரியா, ருமேனியா, ஹங்கேரி ஆகிய நாடுகளோடு கொண்டிருந்த உறவை ரத்து செய்து விட்டதாக அர்ஜென்டைன் அரசாங்கம் அறிவிக்கிறது.

## கீழக் கோடி நாடுகள்.

**பிப்ரவரி 2.**—மார்ஷல்ஸ் தீவுக் கூட்டத்தைச் சேர்ந்த ராய் தீவை அமெரிக்கப் படைகள் கைப்பற்றின.

குவாஜாலீன், நாமூர் ஆகிய தீவுகளில் போய் அமெரிக்கப் படைகள் இறங்கின.

யுத்த நிலைமையைப் பற்றி ஆஸ்திரேலிய யுத்த மந்திரி மிஸ்டர் எம். எப். எம். போர்ட் ஒரு அறிக்கை வெளியிட்டார்.

**பிப்ரவரி 3.**—மார்ஷல் தீவு கூட்டத்தைச் சேர்ந்த நாமு, கோகன், எப்ஜெல், யேப்னு, எட்கிஜென் ஆகிய தீவுகளை அமெரிக்கப் படைகள் கைப்பற்றின.

விமானத் தாக்குதலுக்கு டோக்கியோ நகரம் தயாராயிருப்பதாக டோக்கியோ நகர மேயர் கூறினார்.

**பிப்ரவரி 4.**—குவாஜாலீன் தீவை அமெரிக்கப் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

மார்ஷல் தீவுகளின் இராணுவ கவர்னர் என்னும் முறையில், அட்மிரல் செஸ்டர் நிமிட்ஸ் பிரகடனம் விடுத்திருக்கிறார்.

**பிப்ரவரி 5.**—குவாஜலீனுக்கு வடக்கேயுள்ள உபெயா தீவின் ஒரு பாதியை அமெரிக்கப் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

விவாக்கை நேச நாட்டு விமானங்கள் தாக்கிய போது 80 ஜப்பானிய விமானங்கள் நாசஞ் செய்யப்பட்டன.

**பிப்ரவரி 6.**—கக்கியு, பியெக்ஜ், எல்பர் தீவுகளையும் பாதுகாக்கப்படாத பல தீவுகளையும் கைப்பற்றிக் கொண்டன.

## விஷி, சுயேச்சை பிரான்சு, எதிரி கைப்பற்றிய நாடுகள்.

**பிப்ரவரி 8.**—பொருளுதவி பற்றியும் பரஸ்பர உதவி பற்றியும் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கும் பிரஞ்சு மீட்சிக் கமிட்டிக்கும் ஒரு ஒப்பந்தம் கையெழுத்தானது.

## தூரக் கிழக்கு நாடுகள்.

**பிப்ரவரி 7.**—மார்ஷல் தீவுகளில் 8,000 ஜப்பானியர்களுக்கு மேல், அமெரிக்கர்கள் கொன்றுள்ளார்கள்.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.